தலையங்கம்

## மகா சிவராத்திரி

சிருஷ்டியில் மறுமலர்ச்சி உண்டாவதற்கான காலம் மகா சிவராத்திரி, உலகில் தேவர்களுக்கெல்லாம், மகாதேவனாக, அதி சிரேஷ்டமானவர் அதாவது எல்லா மகிமைகளுக்கும் உரியவராக இருப்பவர் பரமாத்மாவாகிய சிவன். சிவன் என்ற சொல் உலக நன்மையாளன், கல்யாணகாரி, மங்களம் செய்விப்பவர் என்ற காரணத்தைக் குறிக்கின்ற பெயராகும். இதன் மூலம் வேறு எவராலும் செய்ய முடியாத ஏதோ ஒரு மகத்தான காரியம் செய்திருக்கின்றார் என்பது விளங்குகிறது. அது என்ன?

பரமாத்மாவாகிய கடவுள் தர்மத்தைப் படைக்க, காலத்தால் மனிதன் அதர்மத்தைப் படைத்து விடுகிறான். ஆதியில் படைக்கப்பட்ட அந்த மனிதன் தெய்வீக குணங்கள் நிறைந்த ஆத்மாவாக இருந்தான். ஆத்ம அபிமானியாக வாழ்ந்தான். சுகத்தையே அனுபவமாகக் கொண்டிருந்தான். தேவதை என அழைக்கப்பட்டான். ஆதலால் அக்காலம் சொர்க்கம் என்று அழைக்கப்பட்டது. எனினும் காலம் மாறிக் கொண்டேயிருக்கிறது. மேலும் இக்காலம் 5000 ஆண்டுகள் கொண்ட அதி முக்கியமான வரலாற்றை உள்ளடக்கிய காலமாகவும் இருக்கின்றது. இது கல்ப காலம் எனவும் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இந்த கல்பம் ஒவ்வொரு முறையும் சரியாகத் தொடங்குவதும், இறுதிக் கட்டத்தை அடைவதாகவும் உள்ளது. இந்த நெடுந்தூர வாழ்க்கைப் பயணத்தின் வரலாறு மூலம் மனிதன் முற்றிலுமாகத் தன்னைப்பற்றிய உண்மையை மறந்தே போய்விடுகிறான். இதன் பிரதிபலிப்பாக மனிதன் அனுபவம் செய்த சுகம், சோகமாக மாறிப்போய்விடுகிறது. இதற்கான காரணம் என்ன என்றால், அறியாமை என்பதாக இருக்கின்றது. அதாவது உயிரும், உடலும் இணைந்த சொரூபம் மனிதன் என்று புரிந்து

சங்கமயுகம்

பொருளடக்கம்

மலர்: 25 பிப்ரவரி - மார்ச் 2012 இதழ்: 6


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 01 |
| 2. பகவான் வாக்கு | 03 |
| 3. அனுபவ கட்டுரை | 04 |
| 4. ஆன்மீக கல்வியின் அடிப்படைத் தத்துவம் | 10 |
| 5. சிவசிந்தனையும் சிவராத்திரியும் | 21 |
| 6. ஏழு அதிசயங்கள் | 23 |
| 7. சுட்டி படு சுட்டி | 26 |
| 8. கோபத்தை வெல்ல முடியுமா? | 28 |
| 9. இறைவனின் பதில்கள் | 31 |


இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலிருந்து தொகுத்து வழங்கப்பட்டவையாகும்.

ஆசிரியர்

**"தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி"**



கொள்கிறோம். ஆனால் இந்த இரண்டில் நான் என்று கூறும் போது அந்த நான் உயிரைக் குறிக்கின்றதா? அல்லது உடலைக் குறிக்கின்றதா? உண்மையில் உயிர் என்பது உடலை இயக்கும் சக்தியாக, உடலைத் தன் பயன்பாட்டுக்கு உபயோகப்படுத்துகின்ற சக்தியாக தத்துவப்பொருளுக்கு அப்பாற்பட்ட அழிவற்ற நிலையான ஆத்மாவாகும். ஆனால் உடல் என்பது ஆத்மாவால் இயக்கப்படுகின்ற தத்துவப்பொருளாலான, அழியக்கூடிய நிலையற்ற ஜடம். இந்த உண்மையைப் பற்றிய அறியா நிலை தான் அறியாமை எனப்படுகிறது.

ஆதியில் நான் என்னை ஆத்மா என்று உணர்ந்தவனாக இருந்தேன். அப்போது ஆத்ம ஒளியின் பிரகாசத்தில், சுக அனுபவத்தில் வாழ்ந்தேன். ஆனால் எப்போது நான் என்னை ஒரு ஆத்மா என்பதை மறந்து சரீரம் (உடல்) என்று நினைத்தேனோ அன்று முதல் ஆத்ம ஒளிப் பிரகாசத்திலிருந்து விலகிப்போனேன். இதனால் ஆத்ம தர்மத்தையும் மறந்தேன். ஆத்ம சக்தியையும் இழந்து விட்டேன். இதன் பலனாக அறியாமை இருள் சூழ்ந்து கொள்ள, சோகம் என்னைப்பற்றிக் கொண்டு விட்டது. இவ்வாறாக எனது வாழ்க்கைப் பயணத்தில், நான் என்னை விட்டு வெகு தூரம் விலகிய பயணத்தில் இருந்து கொண்டிருக்கிறேன். இந்நிலையில் எனக்கு துணை வேண்டும் என்ற எண்ணம் மனதில் எழுகிறது. எனக்கு யார் துணை? தேடுதல் ஆரம்பமானது. தேடினேன், தேடி அலைந்தேன். தேடிக் கொண்டேயிருந்தேன்.

அப்போது தான் எதிர்பாராத அந்த சம்பவம் நிகழ்ந்தது. **கலியுக இறுதியான நேரம், பரமாத்மாவின் அவதாரம் எனும் அற்புதம் நடந்தது.** இது பரமாத்மா ஆத்மாக்களை பூலோகத்தில் சந்திக்கும் அற்புதம். அதாவது ஆத்மாக்கள் பூலோகத்தில் உடலை ஆதாரமாக எடுத்திருக்கும்போது பரமாத்மாவும் ஒரு உடலை தற்காலிகமாக ஆதாரமாக எடுத்துக் கொண்ட பிறகு தான் சந்திக்கின்றார் என்ற உண்மையைக் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறான சந்திப்பு ஒவ்வொரு கல்பத்திலும் ஒரே ஒரு முறை தான் நிகழ்கிறது என்பதையும் அறிவது அவசியமாக இருக்கிறது.

இந்த நேரம் அறியாமை இருள் சூழ்ந்த நேரம். ஆதலால் அமைதி வேண்டும், சுகம் வேண்டும் என்று எல்லோருமே விரும்புகின்ற நேரம். ஆனால் அறியாமை இருள் அகற்றப் படும் வரை அமைதி என்பது ஒரு கற்பனையாகவே இருக்க முடியும். ஆனால் இந்த அறியாமை இருள் அகற்றும் வித்தையறிந்த வித்தகர் யாரேனும் உளரா?

ஆம். ஆனால் இங்கு யாருமிலர். இத்தகைய நிலையில் தான் மேலோகவாசியான பரமாத்மா இப்பூலோகத்தில் அலௌகீக திவ்ய ஜன்மம் எடுக்கின்றார். இது பரகாய பிரவேசம். இது தான் அவதாரம் எனப்படுகிறது. பகவான் வாக்கு. **“நாடகம் முடிகிறது. ஆத்மாக்கள் அனைவரும் வீடு திரும்பும் நேரம். ஆகையால் உலக நாடகத்தில் அவரவர் பாத்திரத்தில் நடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் அனைவரையும் உடல் பந்தனம் மற்றும் கர்ம பந்தனத்திலிருந்து விடுவிக்கும் முக்தி, ஜீவன் முக்தி அளிக்கிறேன். இது என் கடமை. இதற்காகவே அவதாரம் செய்திருக்கின்றேன்”.**

இந்த அவதாரம் என்பது உலக முழுவதும், விகார ரோகத்தால் பீடிக்கப்பட்டு அஞ்ஞான அறியாமை நித்திரையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது ஆத்ம தீபம் ஏற்றும் ஞான ஒளி தருவதற்கான வருகை யாகும் இதனால், அறியாமை இருள் அகன்றது. ஆத்ம தர்மம் மலர்ந்தது. மீண்டும் அனுபவம் சுகமாகிப் போனது. இவ்வாறாக பரமாத்மாவாகிய சிவன் அவதாரத்தின் மூலமாக அஞ்ஞான மாகிய இருள் விலகியது என்பதன் இரகசியமே **மகா சிவராத்திரி** என்ற பெயரில் நாம் கொண்டாடும் பண்டிகை.




**இனிமையான குழந்தைகளே!**

அதிமேலான அன்புத் தந்தை, குழந்தைகள் அனைவரையும் எல்லையற்ற மதுவன் இல்லத்தில் அன்புடன் வரவேற்கின்றார். தந்தையின் வீட்டுக்கு வந்திருக்கும் நீங்கள் விருந்தாளிகள் அல்ல. நீங்கள் பரமாத்மாவின் குழந்தைகள், மகான் ஆத்மாக்கள்.

இன்றைய உலகம் நாளுக்கு நாள் அமைதியை இழந்து கொண்டேயிருப்பதற்கான காரணம் பயம். நாளை என்ன நடக்குமோ என்ற பயம். ஒவ்வொருவரும் பயம் என்னும் ஆசனத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறார்கள், பயந்து கொண்டிருக்கும் தைரியமில்லாத ஆத்மாக்கள் ஆத்ம சக்தியைப் பெறுவதன் மூலமே அமைதியை அனுபவம் செய்ய முடியும்.

ஆதலால் ஆத்ம சக்தி என்றால் என்ன என்பதைப்பற்றி முதலில் புரிந்து கொள்வது மிக மிக முக்கியமானதாகும். ஆத்ம சக்தியைப் பெறுகின்ற அளவுக்கு புத்தி ஸ்திரத்தன்மை அடையும். புத்தியை தூய்மையானதாகவும் ஆக்கும். இவ்வாறு தூய்மையாகிவிட்ட ஆத்மா, ஸ்தூல சக்தியான அணுசக்தியை நன்மை பயக்கும் காரியங்களிலேயே பயன்படுத்தும். இவ்வாறு ஆத்ம சக்தியும், விஞ்ஞான சக்தியும் இணைந்து இன்னொரு முறை அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த உலகை உருவாக்கும்.

ஆதலால் அமைதியளிக்கக்கூடிய வள்ளலான தந்தை கூறுகின்றார். அன்பான குழந்தை களே! ஆத்ம சக்தியை உணருங்கள். அமைதியே ஆத்மாவின் சுய தர்மம். உங்கள் செயல்களும் அமைதியளிப்பதேயாகும். உலகில் மீண்டும் அமைதியை ஸ்தாபிக்கும் தந்தையின் கைங்கர்யத்தில் நிமித்தமாகி விடுங்கள்.

**கடவுள் என்பவர் அன்பு, அமைதி, ஆனந்தம், கருணை போன்ற நற்குணங்கள் நிறைந்தவர், பிறகு அவர் எப்படி நமக்கு சோதனை தர முடியும்**

# அனுபவ கட்டுரை

## எனது அலௌகீக ஜன்மம் பாபா மடியில் பிரம்மா குமாரி ஷீலு, அபுமலை

தமிழாக்கம்: பி.கு. பத்மா, சாந்திதாமம், அண்ணாநகர், சென்னை

ஆத்மாவாகிய எனக்கு சாகாரத்தில் பிரம்மா பாபாவின் சாகார பாலனையைப் பெற்ற மிகப்பெரும் சௌபாக்கியம் இருந்தது. எனது அலௌகீக ஜென்மம், பிரம்மா பாபாவின் மடியில் உண்டானது என்று எனக்கு போதை இருக்கிறது. எனக்கு 12 வயது (டிசம்பர் 1959) இருந்தபோது எனது லௌகீக தாயார் என்னை பாபாவை சந்திப்பதற்காக அழைத்துச் சென்றிருந்தார். அவர் கடந்த சில நாட்களாக ஞான மார்க்கத்தில் சென்று கொண்டிருந்தார். என்னையும் மும்பையில் உள்ள அந்த பிரம்மா குமாரிகள் பாடசாலைக்கு அழைத்துச் சென்றார். இங்கு என்ன சொல்லித்தருகிறார்கள் என்பது எனக்கு அவ்வளவாக கவனத்தில் இல்லை. வெறுமனே முரளி வகுப்பில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.

### தாயாருக்கு பிரம்மா போஜனத்திற்கான அழைப்பு கிடைத்தது

டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி குளிர்காலம். அப்போது அபுவில் மிகுந்த குளிர் இருந்தது. எனவே இம்மூன்று மாதங்கள் பாபா மும்பையில் தங்கியிருந்தார். பாபா தங்குவதற்கு ஒரு பிளாட் எடுத்திருந்தனர். மேலும் அனைத்து பக்கங்களிலிருந்து தாதிகளும் அங்கு வந்திருந்தனர். பாபா அவ்வப்போது பிரம்மா போஜனம் ஏற்பாடு செய்வது வழக்கம். சில விசேஷ ஆத்மாக்களுக்கு அழைப்பும் விடுப்பதுண்டு. அந்த அடிப்படையில் எனது தாயாருக்கும் கூட பாபாவிடமிருந்து பிரம்மா போஜனத்திற்கு அழைப்பு கிடைத்தது.

### பாபா ஒவ்வொருவருக்கும் ஒரு பிடி உணவு ஊட்டினார்.



பாபாவுடன் சேர்ந்து உணவருந்தும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. பாபா குழந்தைகளுடன் ஹாலில் அமர்ந்திருந்தார். சுமார் 20-30 சகோதர சகோதரிகள் அங்கு இருந்தனர். அனைவரும் அரை வட்ட வடிவில் அமர்ந்திருந்தனர். பாபா எதிரில் அமர்ந்திருந்தார். சகோதரிகள் பரிமாறிக் கொண்டிருந்தனர். பாபா ஒவ்வொரு குழந்தையாக அழைத்தார். முதலில் அவர்கள் பாபாவிடம் திருஷ்டி பெற்றனர், பிறகு பாபாவின் மடியில் அமர்ந்தனர். பாபா அவர்களது முதுகைத் தட்டிக் கொடுத்தார். அதன் பின் ஏதேனும் வரதானம் கொடுத்தார். பின்பு ஒவ்வொருவரது வாயிலும் ஒரு பிடி உணவை ஊட்டிவிட்டார். இவ்வாறாக ஒவ்வொருவரும் பாபாவின் மடியில் சென்று வந்த பின்பு தான் பிரம்மா போஜனம் ஆரம்பமானது.

### பாபாவை எனது தாயாரின் குரு என நான் எண்ணினேன்:

எனது லௌகீகத் தாயார் என்னை பிரம்மா போஜனத்திற்காக பாபாவிடம் அழைத்துச் சென்றிருந்தார். அனைத்து குழந்தைகளும் ஒவ்வொருவராக பாபாவின் மடியில் அமர்வதை நான் பார்த்தேன். எனது முறை வந்தபோது எனக்கு சிறிது தயக்கமாக இருந்தது. எப்படி அமர்வது என்று. யார் இந்த பாபா? காரணம் என்னவெனில் மிக குறைந்த நாட்களே இந்த இயக்கத்திற்கு வந்து கொண்டிருந்தேன். இவர் எனது தாயாரது குரு என்ற எண்ணத்தில் நான் இருந்தேன். பாபா என்னைப் பார்த்தார், குழந்தை தயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து பாபாவே வா குழந்தாய், வா! என்று அழைத்தார்.

அப்போது எப்படி காந்தம் ஊசியை தன் பக்கம் கவர்ந்திழுக்குமோ அப்படி எனக்கு அனுபவம் உண்டானது. நான் ஓடிச் சென்று பாபாவின் மடியில் அமர்ந்துவிட்டேன். தலை பாபாவின் மடியில் இருந்தது. பாபா என் முதுகைத் தடவிக் கொடுத்தவாறே கூறினார்: குழந்தை தனது தந்தையிடம் திரும்பி வந்துவிட்டது என்று. இந்த வரதானத்தை பாபா எனக்குக் கொடுத்தார். எனக்கு புதுப்பிறவி எடுத்தது போன்ற உணர்வு ஏற்பட்டது.

### தாயாருக்கு பிரம்மா பாபாவின் சாட்சாத்காரம் கிடைத்திருந்தது:

ஏன் அவ்வாறு உணர்வு ஏற்பட்டது? ஏனெனில் நான் பிறந்து மூன்று நாட்கள் ஆகியிருந்தபோது லௌகீக தந்தை ஒரு விபத்தில் இறந்து விட்டார். நான் லௌகீக தந்தையைப் பார்த்ததில்லை. அவரும் என்னைப் பார்த்ததில்லை. அவர் வெளியூரில் இருந்தார். மும்பைக்கு வரும் வழியில் தான் விபத்தில் சரீரம் விட்டிருந்தார். நான் பெரியவளாகி இவ்விபத்து பற்றி தெரிந்த போது எனது தந்தையைப் பார்க்க முடியாத அளவிற்கு நான் அப்படி என்ன பாவம் செய்தேன் என்று மனதில் வேதனை இருந்தது. நான் பிறந்த 3வது நாள் ஒரு அழகான அற்புதமான நிகழ்வும் நிகழ்ந்திருந்தது. அதாவது எனது தாயாருக்கு பிரம்மா பாபாவின் சாட்சாத்காரம் ஆகியிருந்தது. அச்சமயம் அவர்களுக்கு ஈஸ்வரிய ஞானத்தைப் பற்றிய அறிமுகம் இல்லை. அன்றைய நாள் அதிகாலை ஒரு அதிசய உருவம் அவருக்கு எதிரே வந்து நின்றிருந்ததைப் பார்த்தார், அவர் தனது இரு கைகளையும் அகல விரித்தவாறு இருந்தார். (குழந்தைகளை ஆவாஹனம் செய்வது போல் பிரம்மா பாபாவின் ஒரு படம் உள்ளது) ஃபரிஸ்தாவான அவர் கூறினார், இக்குழந்தை என்னுடையது, எனக்கு கொடுத்து விடு. நான் இக்குழந்தைக்கு தந்தை. எனது லௌகீகத் தாயார் பார்த்துக் கொண்டிருந்தார். இவர் யார்? ஒளியாலான ஃபரிஸ்தா, வயதான வராக இருக்கிறாரே! அவரது முகத்தில் மிகுந்த பிரகாசம் இருந்தது. எனது தாயார் யோசிக்க ஆரம்பித்தார். தந்தை என்று இவர் எப்படி கூறிக்கொண்டிருக்கிறார்! ஆனால் அவருக்கும் கூட மிகுந்த ஒரு ஈர்ப்பு உண்டானது. அவர் என்னை எடுத்து அந்த ஃபரிஸ்தாவிடம் கொடுத்துவிட்டார். மேலும் அவர் ஒரு நொடியில் மறைந்துவிட்டார். தாயாருக்கு விழிப்புணர்வு வந்து பார்த்தபோது குழந்தை (நான்) அங்கேயே இருந்தேன். ஆனால் அவரது மனதில் சதா இக்கேள்வி இருந்தது எனது தந்தை என்று எப்படிக் கூறினார்? ஆனால் இதை அவர் யாரிடமும் கூறவில்லை. அதே நாள் மாலையில் லௌகீக தந்தை சரீரம் விட்ட செய்தியை எனது தாயார் கேள்விப்பட்டார். பாபா முதலிலேயே எனது தாயாருக்கு இந்த எதிர்பாராத சம்பவத்திற்கு தயார் செய்து விட்டது போல இருந்தது. நான் தான் எனது தாயாருக்கு முதல் குழந்தை. எனது தாயாருக்கும் சுமார் 18 வயது தான் ஆகியிருந்தது. எனது அலௌகீக ஜென்மம் அந்த நேரமே ஏற்பட்டுவிட்டது.

### ஒருவரில் மூவரின் அனுபவம்:

அதனால் எப்போது நான் பாபாவின் மடியில் சென்றேனோ அப்போது இவரே எனது அலௌகீக தந்தை என்று தோன்றியது. இவ்விதம் பிரம்மா பாபாவிடத்திலேயே நான் லௌகீக, பரலௌகீக இரு தந்தைகளைப் பார்த்தேன். இன்னொரு வார்த்தையில் கூற வேண்டுமெனில் ஒரு பிரம்மா பாபாவிடத் திலேயே மூன்று தந்தையரின் அனுபவம் செய்தேன்.

### வெளிநாடு செல்வதற்கான வரதானம் கிடைத்தது

ஜுன் 1959-60ல் யாரெல்லாம் ஞானத்தில் இருந்த கன்னியர்களோ அவர்களை பாபா அழைத்திருந்தார். பாபா கன்னியர்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். எனது இந்த கன்னியர்கள் உலக சேவை செய்வார்கள்.

பாபாவின் பெயரை புகழடையச் செய்வார்கள் என்று கூறினார். அச்சமயம் நான் மும்பையில் புகழ்பெற்ற ஆங்கிலப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். அதனால் எனது ஆங்கிலம் நன்றாக இருந்தது. நான் ஒரு ஞானம் நிறைந்த ஆங்கிலக் கவிதையை பாபாவின் முன்பு படித்தேன். அச்சமயம் பாபா அன்போடு கூறினார், குழந்தாய் நீ ஆங்கிலத்தில் புத்திசாலி யாக இருக்கிறாய், பாபா உன்னை வெளி நாடு அனுப்புவார். அந்த 12 வயதில் எனக்கு அந்த வரதானம் கிடைத்தது. வெளிநாடு என்றால் என்ன என்ற ஞானம் கூட அப்போது இல்லை. பின்னர் நிறைய தடவை பாபா முன்பு ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினேன். பாபாவின் இவ்வரதானம் குழந்தைப் பருவத்திலி ருந்தே கிடைத்திருந்தது.

## எப்போதும் பாபாவே வெற்றி அடைந்தார்:

1960ம் ஆண்டு நான் மும்பையிலிருந்து மதுபன் சென்றேன். மதுபனில் கூட பாபாவின் அன்பு நிறைய கிடைத்தது. அச்சமயம் மதுபன் மிகச் சிறியதாக இருந்தது. ஹிஸ்டரி ஹால் கூட அப்போது இல்லை. இந்த ஹால் 1962ல் உருவானது. மதுபனிற்கு வரக்கூடிய ஒவ்வொரு குழந்தைக்கும் பாபா மிகுந்த அன்பு கொடுத்தார். முழு நேரமும் குழந்தைகள் மீது தான் கவனம் செலுத்தினார். யாரெல்லாம் பார்ட்டியில் வந்திருந்தார்களோ அவர்களுக்கு பாபாவைத் தவிர வேறு எதிலும் ஈர்ப்பு இருந்ததேயில்லை. அமிர்தவேளையும் செய்வித்தார். முரளி வகுப்பும் பாபா நடத்தினார். அதன் பிறகு பாபா குழந்தைகளுடன் பேட்மின்டன் கூட விளையாடினார். நாங்கள் சிறியவர்களாக இருந்தபோதிலும் பாபாவுடன் பேட்மின்டன் விளையாடினோம். பாபா ஆறடி உயரம் குழந்தைகள் சிறியவர்கள். ஆனால் பாபா அப்படிப்பட்ட குழந்தைகளுடனும் விளையாடி பாபாவே வெற்றி அடைவார். பாபா கூறினார்: குழந்தைகளே, பாருங்கள் இதில் டபுள் இன்ஜின் இருக்கிறது, அதனால் மிகவும் சக்திசாலியாக இருக்கும் அல்லவா? பிறகு பாபா குழந்தைகளுடன் பிரம்மா போஜனம் சாப்பிடுவார், பிறகு ஊஞ்சலில் அமர்வார். அப்போது ஒவ்வொரு குழந்தையையும் பாபா ஊஞ்சலில் அமர்த்துவார். அச்சமயம் பாபா மிகவும் அழகான வரதானமும் கொடுத்தார்.

## எல்லோரையும் விட மிகப்பெரிய மூன்று அத்தாரிட்டிகள்:

நானும் எனது லௌகீகத் தாயாரும் பாபாவுடன் ஊஞ்சலில் அமர்ந்திருந்தோம். பாபா நடுவில் இருந்தார். நாங்கள் இருவரும் பக்கத்தில் அமர்ந்திருந்தோம். பாபா என்னிடம் கேட்டார், குழந்தாய்! யாருடன் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறாய்? நான் மிகுந்த போதையுடன் பதிலளித்தேன். பாபாவுடன் என்று. பிறகு பாபா கேட்டார், வேறு யாருடன் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறாய்? நான் கூறினேன் வேறு யாருமில்லை. அப்போது பாபா கேட்டார், யோசி, வேறு யாருடன் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறாய்? நான் கூறினேன், பாபா நீங்கள் மற்றும் அம்மா. அப்போது பாபா கூறினார் குழந்தாய் ! எப்போதெல்லாம் பாபாவுடன் ஊஞ்சலாடுகிறாயோ அச்சமயம் நினைவில் வைக்க வேண்டும். நான் உலகின் அனைவரிலும் பெரிய மூன்று அத்தாரிட்டி யுடன் ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருக்கின்றேன். ஒருவரே அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தை பரமாத்மா. அவர் இவ்வுடலில் வீற்றிருக்கிறார். இரண்டாவது அனைத்து பிரஜைகளின் தந்தை பிரம்மா பாபா. மூன்றாவது அடுத்து வரவிருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணர். முதல் தேவதை. ஏனெனில் பிரம்மா பாபா தான் ஸ்ரீ கிருஷ்ணர் ஆகிறவர். இவ்விதமாக உலகின் அனைவரிலும் பெரிய அதி சிரேஷ்ட அத்தாரிட்டிகளுடன் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறாய். இவ்வாறு பாபா கூறியவுடன் போதை ஏறிவிட்டது. இன்று கூட எப்போதெல்லாம் ஊஞ்சலாடுகிறேனோ அந்த காட்சி எதிரில் வருகிறது. பாபாவின் தொடர்பில்

இருக்கிறேன். மேலும் உலகின் அனைவரிலும் பெரிய மூன்று அதிசிரேஷ்ட அத்தாரிட்டியுடன் ஊஞ்சலாடிக் கொண்டிருக் கின்றேன். பாபா அவ்வளவு அன்பை வழங்கினார்.

### பாபாவின் அதிகமான அன்பு கிடைத்தது

இவ்விதம் எப்போதெல்லாம் பாபாவை சந்திக்கிறோமோ அப்போதெல்லாம் ஏதாவது வரதானம் கொடுத்துக் கொண்டே இருந்தார். எந்த பாலனையை நாங்கள் அடைந்தோமோ, அதை எப்படி மறக்க முடியும்? மதுபனில் பத்து நாட்கள் இருந்தபோது பாபாவின் அதிக அன்பு கிடைத்தது. புறப்படும் நாளன்று பாபா குழந்தைகளை மிக அழகான முறையில் அன்புடன் வழியனுப்பினார். பாண்டவ பவனுக்கு பின்னால் உள்ள வழியிலிருக்கும் மரம் வரை பாபா வருவார். பொருட்கள் மாட்டு வண்டியில் செல்லும், நாங்கள் பஸ் நிலையம் வரை நடந்து செல்வோம். அங்கிருந்து பஸ்ஸில் கீழே அபுரோடு வருவோம். வழியனுப்புவதற்கு முன்பு பாபா அனைவருக்கும் பரிசு கொடுப்பார். பாபாவும் மம்மாவும் தனித்தனியாக பரிசு பொருட்கள் கொடுப்பார்கள். மம்மாவும் தனிப் பட்ட முறையில் சந்திப்பார். பாபா தனியாக சந்திப்பார். சில நேரம் குழுவினராக வரும் போது இருவரும் சேர்ந்து சந்திப்பார்கள்.

### மும்பை திரும்பிச் செல்ல மனம் வரவில்லை:

பாபாவின் அவ்வளவு அன்பை அடைந்ததால் மும்பை திரும்பிச் செல்ல மனம் வரவில்லை. நான் திரும்பி மும்பை செல்ல மாட்டேன், இங்கே தான் இருப்பேன் என்று எண்ணினேன். புறப்படும் நேரம் வந்தபோது அனைவரும் தயாராகிவிட்டிருந்தனர். அனைவரும் பாபாவிடம் விடைபெற்றுக் கொண்டிருந்தனர். நான் ஒளிந்து கொண்டேன். அனைவரும் தேட ஆரம்பித்தனர். முழு மதுபனிலும் தேடிவிட்டனர். ஆனால் என்னை பார்க்க முடியவில்லை. நானோ மொட்டை மாடியில் மறைந்திருந்தேன். அங்கு வந்து என்னை யாரும் தேடவில்லை. என்றாலும் கடைசியில் என்னை தேடிக் கண்டுபிடித்து பாபாவிடம் அழைத்து வந்துவிட்டனர். நான் பாபாவிற்கு முன்பு சென்றேன். பாபா புரிந்து கொண்டார், நான் பாபா முன்பு அழுதேன். நான் திரும்பி மும்பை செல்ல மாட்டேன், மும்பை மாயா நகரம் நான் இங்குதான் இருப்பேன் என்று கூறினேன். புத்திவான் பாபா குழந்தைகளின் உள்ளத்தை தெரிந்து வைத்திருந்தார். நல்லது. சரி இக்குழந்தை இங்கேயே இருக்கட்டும், பாபா இங்கே பள்ளியில் படிக்க வைப்பார். நீங்கள் திரும்பி மும்பை செல்லுங்கள் என்று எனது லௌகீக தாயாரிடம் கூறினார். இந்த 12-13 வயதுப் பெண் இங்கு எப்படி இருப்பாள்? பாபாவிடம் படிப்பை எங்கு படிப்பாள்? என்று தாயார் என்னை பார்க்க ஆரம்பித்தார். நான் மதுபனில் இருப்பேன் என்று எனக்கு குஷியாகிவிட்டது. பிறகு பாபா, எனக்கு மிக அன்புடன் புரிய வைத்தார், பார் குழந்தை நீ உலக சேவை செய்ய வேண்டும். இங்கு இருந்தாய் என்றால் இங்கோ நல்ல பள்ளி இல்லை. நீயோ ஆங்கிலத்தில் மிகுந்த புத்திசாலி ஆக வேண்டும். பாபா உன்னை வெளிநாடு அனுப்புவார். பாபா அந்த நேரம் வெளிநாட்டை நிறைய நினைவு செய்தார். மேலும் ஆங்கிலம் பேசும் சகோதரிகளை அந்தவிதமாக கூறவும் செய்தார். பாபா கூறினார், நீ மும்பைக்குச் சென்று நல்ல பள்ளியில் படித்தாய் என்றால் பாபா உன்னை வெளி நாடு அனுப்புவார். எப்போது படிப்பு முடிவடையுமோ அப்போது பாபா உன்னை மதுபனுக்கு அழைத்துக் கொள்வார்.

### புத்தியில் பாபாவைத் தவிர எதுவுமில்லை:

பாபா அழைத்துக் கொள்வார், இந்த வார்த்தையைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். மகிழ்ச்சியோடு மும்பைக்குத் திரும்பிச் சென்றேன். இப்போது எனது புத்தி

அவ்வாறு ஆகியிருந்தது. அதில் பாபாவைத் தவிர எதுவும் இல்லை. பள்ளிக்குச் சென்ற போது பள்ளியில் அனைவரும் மீராபாயி எனக் கூறி அழைத்தனர். என்னுடன் படிப்பவர்கள் ஹோட்டல், சினிமா எனச் சென்றாலும் நான் விலகியே இருந்தேன். பள்ளிக்குச் செல்லும் முன் சென்டருக்குச் செல்வது எனது தினசரி நியமமாக இருந்தது. பாபா கூட கூறினார், குழந்தாய்! நல்ல முறையில் படிப்பைப்படி, பிறகு பாபா உன்னிடமிருந்து அதிகமாக சேவைகளை ஏற்றுக் கொள்வார்.

### ஆன்மீக டாக்டர் ஆகுக!

1967ல் நான் கல்லூரியில் இரண்டாவது வருடம் படித்துக் கொண்டிருந்தேன். எனது குடும்பத்தினர் நான் மெடிக்கல் லைனில் படித்து டாக்டர் ஆக வேண்டும் என்று என்னைக் கட்டாயப்படுத்தினர். ஆனால் எனக்கு பாபா வின் சேவை செய்ய வேண்டும் என்ற ஈடுபாடு இருந்தது. எனது வீட்டினர் இவ்வாறு கூறுகின்றனர், நான் என்ன செய்ய வேண்டும் என்று பாபாவுக்குக் கடிதம் எழுதினேன். பாபா எனக்கு கடிதம் எழுதினார், குழந்தாய் பாபாவுக்கு உன் மீது மிகுந்த நம்பிக்கை உள்ளது. உன்னைப் போன்ற குழந்தைகள் ஆன்மீக டாக்டர் ஆகி உலக சேவை செய்ய வேண்டும் என்று பாபா விரும்புவார். நீ ஆன்மீக டாக்டர் ஆக வேண்டும். இதுவே பாபாவின் ஆசை. டாக்டர் படிப்பு படிக்காதே என்று கூறவில்லை.

### எனக்கு வழி கிடைத்துவிட்டது:

எனக்கு பாபாவுடைய கடிதம் கிடைத் தாலும் நான் டாக்டர் படிப்பு படிக்கக் கூடாது, நான் ஆன்மீக சேவை செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து விட்டேன், குடும்பத் தினரிடமிருந்து தடைகள் வர ஆரம்பித்தது, மிகப்பெரிய குடும்பம் இருந்தது, என்ன செய்வது என்று புரியவில்லை. அச்சமயம் டாக்டர் நிர்மலா தீதி (தற்சமயம் ஞானசரோவர் பொறுப்பில்) மும்பையில் இருந்தார். அவர் அந்த நேரம் மெடிக்கல் பிராக்டிஸ் செய்து கொண்டிருந்த அவர் பாபாவின் ஸ்ரீமத்படி விட்டுவிட்டார். பாபா அவருக்குக் கூறி இருந்தார். குழந்தாய், மெடிக்கல் ப்ராக்டிஸை விட்டுவிட்டு, ஒரு வீடு வாங்கி, அங்கு சென்டர் திறந்து அங்கு குமாரிகளுக்கு டிரெய்னிங் கொடு. ஏனெனில் குமாரிகளைத் தயார் செய்து உலக சேவைக்கு அனுப்ப வேண்டும். தீதியின் பெற்றோர்கள் வாரிசுரிமை சொத்தாக காந்திவலி (மும்பை) யில் அவருக்கு ஒரு வீட்டைக் கொடுத்தனர். அதே வீட்டில் தீதி குமாரிகளுக்கு டிரெய்னிங் கொடுத்தார். நானும் அங்கு சென்று எனது கேள்வியை அவர்களுக்கு முன் வைத்தேன். அவர் கூறினார், பார் நானோ டாக்டர், இருந்தாலும் பாபாவின் ஸ்ரீமத்படி இந்த ப்ராக்டிஸை விட்டு பாபாவின் முழு நேர சேவையில் இருக்கிறேன், உன்னை டாக்டருக்குப்படி என்று நான் எப்படிச் சொல்வேன்? அவருடைய இந்த வார்த்தையிலி ருந்து நான் பாபாவுடைய சேவையில் தான் இருக்க வேண்டும் என்ற வழி கிடைத்து விட்டது.

### சமர்ப்பணம் ஆவதற்கான ஆர்வம் ஏற்பட்டது:

அந்த நேரம் தாதி பிரகாஷ்மணி மும்பை காம்தேவி சென்டரின் பொறுப்பாளராக இருந்தார், நான் அங்கு வகுப்பிற்கு சென்றிருந்தேன். நான் சமர்ப்பணம் ஆக விரும்புகிறேன் என்று அவரிடம் கூறினேன். தாதிஜி சொன்னார், உனது வீட்டாரிடமிருந்து கடிதம் பெற்று வா என்றார். வீட்டினர் கொடுக்கத் தயாரில்லை. லௌகீக சித்தப்பா மகன் அமெரிக்காவில் இருந்தார். நீ அமெரிக்காவுக்கு வா, நான் உன்னைப் படிக்க வைப்பேன் என்று அவர் எழுதியிருந்தார். மாயா நகரம் அமெரிக்கா சென்று என்ன செய்வது என்று எனது மனதில் தோன்றியது. நானோ பாபாவின் சேவை செய்ய வேண்டும்.

**பாபா போய்விடவில்லை:**

1969ல் நான் கல்லூரி இறுதி ஆண்டில் இருந்தேன். தேர்வுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தது. அப்போது 18 ஜனவரி சனிக் கிழமை பாபா இரவு 6.45 மணிக்கு சரீரம் விட்டு விட்டார் என்ற செய்தி கிடைத்தது. தாதிஜி மதுபனிலேயே இருந்தார்கள். பாபா அவ்யக்தமாகிவிட்டார் என்று அனைத்து சேவை நிலையங்களுக்கும் டெலிகிராம் அனுப்பியிருந்தனர். செய்தி அறிந்ததும் அனைத்து சகோதர சகோதரிகளும் என்ன சாதனம் கிடைத்ததோ அதில் இரவு முழுவதும் பயணம் செய்து மதுபன் சென்று விட்டனர். ஞாயிறு காலை 19ம் தேதி நான் சென்டருக்கு சென்று பார்த்தபோது இரண்டு, நான்கு சகோதர சகோதரிகள் மட்டும் அமைதியாக அமர்ந்திருந் தனர். ஞாயிற்றுக்கிழமைகளில் சென்டர் மிகுந்த ஆரவாரத்துடன் இருக்கும், ஏன் இப்படி என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏனெனில் 18ம் தேதி இரவு வகுப்பு முடிந்து நான் 8 மணிக்கு வீட்டிற்கு சென்றிருந்தேன். எனவே எனக்கு எந்த செய்தியும் தெரியாது. நான் சென்டரில் ஒரு சகோதரியிடம் கேட்டபோது பாபா சரீரம் விட்டுவிட்டார் என்று மிக வருத்தத்துடன் கூறினார். நான் கேட்டேன் பாபா சரீரம் விட்டுவிட்டாரா? இப்படி நடக்க முடியுமா? அந்த சமயம் எனக்கு அவ்வளவு பெரும் அதிர்ச்சியாக இருந்தது, முழு பூமியும் அசைந்து கொண்டிருப்பதுபோல, ஆகாயம் பிளப்பது போல அனைத்தும் கீழே வந்துவிடும் போலத் தோன்றியது. கால்கள் நடுங்க ஆரம்பித்தன. பாபா போய் விட்டார் என்றால் இப்போது உலகம் அழிந்துவிடும் என்று எனக்குத் தோன்றியது. பிறகு நான் என்னை எப்படியோ சமாளித்துக் கொண்டேன். நான் பாபா படத்திற்கு முன்பு சென்று கூறினேன், பாபா நீங்கள் போய்விட்டீர்களா? இது எப்படி நடக்கும்? நான் உங்கள் ஆசையை நிறை வேற்றவில்லை. குழந்தை ஆன்மீக டாக்டராகும், ஆன்மீக சேவை செய்யும் என்று நீங்கள் என்மீது அவ்வளவு உயர்ந்த நம்பிக்கை வைத்திருந்தீர்கள். பாபா இப்போது என்ன ஆகும்? அப்போது பாபாவின் அவ்யக்த சொரூபம் அனுபவம் ஆகிக் கொண்டிருந்தது. பிறகு நான் லௌகீக தாயாரிடம் செய்தி கூறிய போது அவர் கூறினார், எப்போது நீ பிறந்தாயோ, அப்போது இதே அவ்யக்த சொரூபம் எனக் கெதிரேயும் வந்திருந்தது. அவ்யக்த ரூபத்தில் பாபா இவ்வாறு கூறினார், குழந்தாய், பாபா செல்லவில்லை. பாபா உங்களுடன் இருக்கிறார், கூடவே இருப்பார். குழந்தைகளை கூடவே அழைத்துச் செல்வார், அப்படியே சென்றுவிட மாட்டார். இதனால் எனக்கு பெரிய ஆறுதல் கிடைத்தது. அதன் பிறகு நான் யக்ஞத்தில் சமர்ப்பணம் ஆகிவிட்டேன். பாபா உள்நாடு வெளிநாடுகளில் அனேக விதமான சேவை களுக்கு நிமித்தமாக்கினார். அப்போதிருந்து இப்போது வரை பாபா கூடவே இருக்கிறார் என்ற இந்த அனுபவத்திலிருந்து கொண்டிருக் கிறேன். **என்னே என் பாக்கியம்** !

**நாம் மகிழ்ச்சியாக இருக்கிறோம் எனில்**
**கடவுளின் அன்பிற்கு பாத்திரமாக இருக்கின்றோம் என்று பொருள்**

**எல்லை என்பது அன்பு நிறைந்த உள்ளத்தில் இல்லை -**
**எல்லையற்றது என்பது குறுகிய மனத்தில் இல்லை**

# ஆன்மீக கல்வியின் அடிப்படைத்தத்துவம்



(பரமாத்மா, **ஆத்மாக்களுக்கு அளிக்கும் சத்திய ஞானமே நமது வழிகாட்டி)**

1. கடவுள் ஒருவரே. அவர் நிராகாரி (சரீரமில்லாதவர்), என்றென்றும் மாறுதலுக்குட்படாதவர். சாசுவதமானவர் (நிலையானவர்) அனைத்து ஆத்மாக்களுக்கும் தாயும் தந்தையுமாக விளங்குபவர் பரமாத்மா. ஒவ்வொருவரும் அவரை அறிந்து உணர்ந்தவராக, அவரிடம் ஆன்மீக அன்பு செலுத்துபவராக ஆக வேண்டும். அவருக்கும் தனக்குமுள்ள சம்மந்தத்தைப் புரிந்து கொண்டு அவரோடு மானசீகமாக அன்புடன் உறவாடுதல் வேண்டும். இதற்கு யோகம் என்று சொல்லப் படுகிறது. மேலும் கடவுளின் குணாதிசயங்கள் அவரது திவ்ய செயல்கள் அவர் நம்மிடம் வைத்துள்ள உண்மையான பேரன்பைப் புரிந்துணர்வோடு மனதை லயிக்க வேண்டும். இது இராஜயோக தியானம் எனப்படுகிறது.

2. இராஜயோக தியானம் ஆன்மீக ரீதியான பரிவர்த்தனைக்கும், சுய முன்னேற்றத்திற்கும் உதவுகிறது. இது சம்ஸ்காரத்தைத் தூய்மையாக்குவதோடு, குணத்தை மேம் படுத்துகிறது. இது மன அழுத்தம், எதிர்மறை சிந்தனை போன்றவற்றிலிருந்து விடுவித்து உடல் ஆரோக்கியத்திற்கும், மன ஆரோக்கியத் திற்கும் உதவுகிறது.

3. பணிவு, சகிப்புத் தன்மை, பொறுமை, திருப்தி, இனிமை போன்ற நற்பண்புகளை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். நற்பண்புகள் அல்லது தெய்வீக குணங்கள் மனம் மற்றும் உடல் ரீதியான தூய்மை, அமைதிக்கு ஆதாரமானதாக இருக்கிறது.

4. தற்காலத்தில் தனி நபர் மற்றும் உலகளவிலான பிரச்சனைகள் அனைத்திற்கும் காரணம் பண்புகள் நடைமுறை வாழ்க்கையில் இல்லாததேயாகும். பண்புகளில் கவனக்குறைவு ஏற்பட்டுவிடும்போது தேகாபிமானம் தலை தூக்குகிறது. இதனால் காமம், கோபம், லோபம், அகங்காரம், கர்வம், சோம்பல், பொறாமை, வெறுப்பு, சந்தேகம் போன்ற எதிர்விளைவு களுக்கு ஆளாகிவிட நேரிடுகிறது. உதாரணமாக ஜனப்பெருக்கம் காம விகாரத்தாலும், சண்டை சச்சரவுகள் கோபத்தாலும், சந்தேகம், வெறுப்பு, மதக்கலவரம், வறுமை ஆகியன பேராசை யாலும், சுய நலம் காரணமாக சுரண்டலும், பதுக்கலும், ஏமாற்றுதலும் உருவாகிறது. இவை அனைத்தையும் இராஜயோகக் கல்வியாலும், இராஜயோக தியானத்தாலும் நீக்கிவிட முடியும்.

5. பரமாத்மாவாகிய கடவுள் உலகமனைத் திற்கும் தாயும் தந்தையுமாக இருக்கின்றார். ஆத்மாக்களாகிய நாம் அவருடைய அழிவற்ற குழந்தைகளாவோம். ஆதலால் ஒருவர்க் கொருவர் சகோதர சகோதரர்கள். அன்போடு நடந்து கொள்ள கடமைப்பட்டவர்கள். இது எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணவும், உலக அமைதிக்கும் சுக வாழ்வுக்கும் அஸ்திவாரமாகும்.

6. வெகு விரைவிலேயே அமையவிருக் கின்ற சத்தியம், அன்பு, அமைதி, செல்வச் செழிப்பு மற்றும் தெய்வீகம் கமழும் பொற்கால வாழ்க்கைக்காக நம்மை இப்போது தயார் செய்து கொள்ள வேண்டும். அதாவது நம்மை இன்றைய தேக அபிமானம் மிக்க சர்வசாதாரண மனித நிலையிலிருந்து சதோபிரதான தெய்வீக மனித நிலைக்கு மாற்றிக் கொள்ள வேண்டும்.

7. சத்திய ஞானம் இப்போது நமக்கு எல்லாம் வல்ல இறைவன் பரமாத்மாவிட மிருந்து கிடைக்கின்றது. பரமாத்மா அசரீரியாக, பிறவிக்கு அப்பாற்பட்டவராக, தெய்வீக ஒளிப்புள்ளியாக

விளங்கும் ஜோதி சொரூபமாக என்றென்றும் நிலையானவராக இருப்பதன் காரணமாக, பூலோக நாடக மேடையில் அவரவர் பாத்திரத்தில் ஜீவாத்மாக்களாக நடித்துக் கொண்டிருக்கும், நமக்கு அவசியமான ஞானமும் முக்தி, ஜீவன் முக்தியும் அளிப்பதற்காக, ஒரு வயோதிக சரீரத்தில் பரகாய பிரவேசம் செய்து, இங்கு சந்திக்கின்றார், பேசுகின்றார், அளவளாவுகின்றார். வழியும் காட்டுகின்றார். நாடகத்தில் அவரது கடமை இவ்வாறு நிச்சயிக்கப்பட்டதாக இருக்கின்றது.

இவ்வாறாக ஒவ்வொரு கல்பத்திலும், கலியுகக் கடைசி நேரத்தில் சங்கமயுகம் என அறிகின்ற புனித வேளையில், இம்மாபெரும் தெய்வ காரியம் நடக்கிறது. இதன் காரணமாக தூய்மை யும், அன்பும் அமைதியும் தெய்வீகமும் கமழும் சத்யுகம் எனும் சொர்க்கம் இப்பூமியில் மீண்டும் அமைக்கப்படுவதன் மூலம் எல்லையற்ற உலக நாடகம் தொடர்கிறது. முடியும் போதே, ஆரம்பமும் ஆகிறது. ஆகவே தான் ஆதியும் அந்தமுமில்லாதது என்கிறோம்.




ஒருபோதும் மாயையின் மோசமான தொடர்பில் செல்ல வேண்டாம்

நன்றி: www.bksewa.org




ஒரு வினாடியில்... நான் ஒரு புள்ளி,
வேறு எந்த எண்ணமும் வேண்டாம்
இப் பயிற்சியை 15 நாட்கள் பயிற்சி செய்து பார்க்கவும்

**சென்டர் பொறுப்பு சகோதரிகளுக்கு - ஓர் விண்ணப்பம்**

**2011-2012 இது வேது கடைசி இதழ்**

2012ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2013ம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் தங்கள் சென்டருக்குத் தேவையான சங்கமயுகம் இதழ் எண்ணிக்கையில் மாற்றம் இருந்தால் அஞ்சல் அட்டை மூலம் விவரம் தெரிவிக்கவும். தனிப்பிரதி விலை ரூ.7.00 விலை மாற்றம் இல்லை. ஆண்டு சந்தா அஞ்சல்வழி ரூ.55/- இதிலும் மாற்றம் இல்லை. பணம் டிராப்ட் மூலம் அனுப்பினால் **SANGAMAYUGAM** என்ற பெயரில் எடுத்து பிரம்மா குமாரிகள், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பவும்.

தனி நபர் சந்தா புதுப்பித்தல் வேண்டும். மணியார்டர் மூலம் பிரம்மா குமாரிகள், சென்னை முகவரிக்கு அனுப்பலாம் அல்லது தனி பிரதி வேண்டுவோர் சென்னை முகவரிக்கு மணியார்டர் அனுப்புவதற்குப் பதிலாக அருகாமையில் உள்ள பிரம்மா குமாரிகள் இராஜயோக நிலையங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்வது நலம். இதழ் தொடர்ந்து வெளி வர அன்புடன் ஆதரவளிக்கும் அனைவருக்கும் ஆன்மீக அன்பும், நன்றியும்.

**மணியார்டர், டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி:**

**BRAHMAKUMARIS, ‘Shantidham’, Q-96, 3rd Avenue,**
**Anna Nagar, Chennai - 600 040 Phone: 26266765 / 26202682**

**ஆசிரியர்**



## ஆஹா கடவுளே! ஆஹா

கடைவீதியில் சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்த ஒருவருக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது. அதனைப் பார்த்த அக்கடையின் விற்பனை பிரிவின் சிப்பந்தி உடனடியாக 108ஐ (அவசர ஊர்தி) தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவழைத்தார். அந்த நோயாளியை அருகில் இருந்த மருத்துவ மனையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்து விட்டு போய்விட்டார். மருத்துவர்கள் பரிசோதனையின் பிறகு அவருக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப் பட்டது.

சுய நினைவிற்கு வந்த அவர் தான் ஒரு கத்தோலிக்க மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு கன்னியாஸ்திரிகளின் கவனிப்பில் இருப்பதை அறிந்தார். ஒரு கன்னியாஸ்திரி சகோதரி அவருக்கு எதிரில் பல விண்ணப்பங்கள் கொண்ட அட்டையும், ஒரு பேனாவுடன் அமர்ந்திருந்தார். அந்த சகோதரி அவரிடம் தனது சிகிச்சைக்கான பணத்தை எவ்வாறு செலுத்த முடியும் என்பதாக வினவினார்.

**கன்னியாஸ்திரி:** உங்களிடம் மருத்துவ காப்பீடு உள்ளதா?

**நோயாளி:** பலகீனமான குரலில் மருத்துவ காப்பீடு செய்யவில்லை.

**கன்னியாஸ்திரி:** வங்கியில் பணம் சேமித்து வைத்திருக்கிறீர்களா?

**நோயாளி:** வங்கியில் பணம் வைத்திருக்க வில்லை.

**கன்னியாஸ்திரி:** உங்களுடைய உறவினர்களில் யாரேனும் பணம் உதவி செய்பவர்கள் உள்ளனரா?

**நோயாளி:** எனக்கு ஒரு திருமணமாகாத சகோதரி உண்டு, அவர் கன்னியாஸ்திரியாக இருக்கின்றார்.

**கன்னியாஸ்திரி:** (இந்த பதிலால் சற்று சலனம் அடைந்த சகோதரி உரத்த குரலில்) கன்னியாஸ் திரிகள் திருமணமாகாதவர்கள் அல்ல! கன்னியாஸ்திரிகள் இறைவனுடன் திருமண மானவர்கள்.

**நோயாளி:** நல்லது! சிகிச்சைக்கான மருத்துவ ரசீதுகளை என்னுடைய சகோதரியின் கணவரிடம் அனுப்பி விடுங்கள்.

---

## ஞான சூரியன் வந்திட்டார் ஞாலம் எங்கும் மகிழ்ந்திட....

அன்பு நிறைந்த ஆத்மா இப்போ
அசுர குணமானதே
அமைதியான ஆத்மா இப்போ
அமைதியிழந்து போனதே

சாந்தமான ஆத்மா இப்போ
அசாந்தியாகிப் போனதே
காலச் சக்கரம் சுழலுவதே - இதன்
காரணம் என்ன தெரியுமா?

இருளும் சூழ்ந்த காலத்தில்
ஒளியும் வீசத் துவங்குதே!
சுகமேயான ஆத்மா இப்போ
துக்கமாகிப் போனதே!

ஞான சூரியன் வந்திட்டார்
ஞாலம் எங்கும் மகிழ்ந்திட

ஆத்மா தூய்மை ஆவதால்
அழியும் அசுர உலகமே!
புதிய உலகம் தோன்றுமே
பொன் யுகம் அதுவே ஆகுமே

**பி.கு. இளங்கோவன், சென்னை**

# சிவ சிந்தனையும், சிவராத்திரியும்



பரமாத்மாவாகிய சிவனைப்பற்றி அறிந்து கொள்ளக்கூடிய நேரம் இப்போது தான். வேறெப் போதுமில்லை. ஆதலால் இதைப்பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம். மனிதர்களுக்கெல்லாம் ஆதார சொரூபமாக உயிரோட்டமுள்ள விதை ரூபமாக, ஜன்ம மரணம் மற்றும் கர்ம பந்தனங்களிலிருந்தெல்லாம் சதா விடுபட்டவராக இருக்கின்றவரும், எல்லோருக்கும் தாயும், தந்தையாகவும் இருப்பவர், இப்பூலோகத்தில் எப்படி அவதரிக்கின்றார்? இது பற்றிய விவரம் ஸ்ரீமத் பகவத் கீதையில் உள்ளது. பரமாத்மா சிவன் சாதாரண மனிதப் பிறவியைப்போல, தாயின் கர்ப்பத்தில் உடலைத் தரித்துக் கொண்டு பிறப்பதில்லை. ஏற்கனவேயே இங்கிருக்கின்ற மனித உடலில் பரகாய பிரவேசம் மூலம் திவ்ய ஜன்மம் எடுக்கின்றார். இது தான் அவதாரம் எனப்படுகிறது. பரமாத்மா சிவனுடைய அவதாரம் அஞ்ஞான இருள் சூழ்ந்த அதர்மம் நிறைந்த காலத்தில் கலியுக இறுதியில் ஒரு சாதாரண உடலில் பிரவேசம் செய்வதன் மூலம் நடக்கிறது. இந்த திவ்ய பிரவேசத்திற்குப் பிறகு அந்த உடலுக்கு பிரஜாபிதா பிரம்மா என பெயரிடப்படுகிறது. பரமாத்மாவாகிய சிவன் பிரம்மாவின் கமலவாய் மூலமாகவே வெகு காலமாக மறைந்து விட்ட ஈஸ்வரிய ஞானம், மற்றும் சகஜ இராஜயோகம் எனும் கல்வியைக் கற்பிக்கின்றார். இதனை இந்த மனிதர் (பிரம்மா) தாரணை செய்து, தனது வாழ்க்கையை தாமரை மலருக்குச் சமமாக தூய்மையைக் கடைப் பிடித்து நரனிலிருந்து நாராயணர் என்ற தேவ பதவியை அடைகின்றார். இந்த விதமாக கலி யுக இறுதியில், பிரம்மா தான் சத்யுக ஆரம்பத்தில் சதோபிரதானமாகின்றார். அதாவது சத்யுகம், திரேதாயுகம், துவாபரயுகம் மற்றும் கலியுகம் ஆகியவற்றையெல்லாம் சுற்றி வந்து அடுத்து வரும் கல்பத்தின் இறுதியில் மீண்டும் பிரம்மா ஆகின்றார். இதன் காரணமாகவே பிரம்மா ஸோ விஷ்ணு, விஷ்ணு ஸோ பிரம்மா என்ற வாசகம் பிரசித்தமாக இருக்கின்றது. சத்யுகம், திரேதாயுகம் ஆகிய காலம் சுகதாமம், சொர்க்கம், பிரம்மாவின் பகல் எனப்படுகிறது. மேலும் துவாபரயுகம், கலியுகம் ஆகிய காலம் துக்க தாமம், நரகம் பிரம்மாவின் ராத்திரி எனப் படுகிறது. இந்த பிரம்மாவின் சரீரம், பரமாத்மா சிவனுடைய பாக்கியசாலி ரதமாக இருப்பதன் காரணமாக பகீரதன் மற்றும் நந்தி என்ற பெயர்களில் பிரசித்தமாகியிருக்கின்றது.

### சிவராத்திரியும் நவராத்திரியும்

நவராத்திரியில் வேள்வியைப் படைத்து துர்க்கா, அம்பா ஆகிய சக்திகளை அதாவது 108 கன்னிகைகளுக்கு பூஜை நடக்கிறது. பாரதத்தில் 108 சாலிகிராம் மற்றும் 108 தானங்கள் ருத்ராக்ஷமாலை மற்றும் வைஜெயந்தி மாலைக்கும் பயபக்தியுடன் நினைவு செய்யும் வழக்கம் உள்ளது. இந்த 108 சாலிக்கிராம் அதாவது இந்த மாலையின் மணிகள், அந்த புனிதமான ஆத்மாக்கள் அதாவது சிவசக்திகளின் அடையாளம் ஆகும். இவர்களுக்கு பரமாத்மாவாகிய சிவன் பிரஜாபிதா பிரம்மாவின் கமலவாய் மூலமாக ஈஸ்வரிய ஞானம் அருளி முகவம்சாவளி சைத்தன்ய ஞான கங்கைகளாக உருவாக்கி பாரதத்தை பதீத நிலையிலிருந்து பாவனமாக்கினார். ஞானக்கடல் சர்வ சக்திவான் பரமாத்மா சிவனிடமிருந்து தான் பிரம்மா குமாரிகள் ஞானம் மற்றும் யோக சக்தியை தாரணை செய்தார்கள்.

மாலையின் ஜோடியாக இருக்கும் மணிகள் பிரம்மா மற்றும் சரஸ்வதியைக் குறிக்கின்றது. இதன் மேலுள்ள பூ நிராகார், ஜோதி சொரூப பரமாத்மா சிவனைக் குறிப்பதாகும். ஈஸ்வரிய ஞானம் மற்றும் சகஜ இராஜயோக சக்தியின்

பலம் மூலமாக சிவசக்திகள் விகாரங்கள் அதாவது சம்ஸ்காரங்களின் மீது வெற்றி அடைந்தனர். ஆதலால் இவர்கள் அசுர சம்ஹாரணி என்று அழைக்கப்படுகிறார்கள். ஞானக்கடல் பரமாத்மா சிவனிடமிருந்து அமிருத கலசத்தைபெற்று அஞ்ஞான நித்திரையில் உறங்கிக்கிடக்கின்ற மனிதர்களுக்கு அமர பதவி அடையச் செய்வதற்கான சேவை செய்ததன் காரணமாகவே சக்திபூஜை என்பது செய்கின்றார் கள். மேலும் இவர்களை வந்தே மாதரம், பாரதமாதா சக்தி அவதாரம் என்று புகழ்பாடு கிறார்கள். பரமாத்மா சிவன் மற்றும் பிரஜாபிதா பிரம்மாவுக்கு உதவியாளர்களாக இருந்து இந்த பதீதமான சிருஷ்டியை பாவன சிருஷ்டியாக அம்பா, சரஸ்வதி, துர்கா, கங்கா, யமுனா என்ற பெயர்களில் பிரசித்தியடைகிறார்கள். இந்த சைத்தன்ய ஞான கங்கைகள் தான் பாரதத்தை சிவஞானம் மூலமாக பரிபாலனையும் செய்கிறார்கள். மகாகாளேஸ்வர் என அழைக்கப் படுகின்ற சிவன் பிரம்மா மூலமாக ஸ்தாபனை காரியம் ஆனவுடன் மகாதேவ் சங்கர் மூலமாக கலியுக சிருஷ்டியை மகா விநாசம் செய்து, மனித ஆத்மாக்களுக்கு முக்தி அளித்து தன்னோடு பரலோகத்திற்கு (பரந்தாமம்) அழைத்துச் செல்கின்றார். இந்த மகத்துவ பூர்வமான வரலாற்று உண்மையை நினைவுகூறும் விதமாகவே சிவராத்திரி என்ற பெயரில் பாரதத்தில் மிகப்பெரிய விழாவாக கொண்டாடப் படுகிறது. அதாவது கலியுகத்தை சொர்க்கமாக மறுமலர்ச்சியடையச் செய்ததன் காரணமாகவே, இந்த சிவசக்திகளின் ஞாபகார்த்தமாக நவராத்திரி விழாவும் கொண்டாடப்படுகிறது. இவ்விதமாக சிவராத்திரிக்கும் நவராத்திரிக்கும் மிகுந்த சம்மந்தம் உண்டு.

***சிவனுக்கும் ராத்திரிக்குமுள்ள சம்மந்தம்:***

சிவராத்திரி மாசி மாதம் 8ஆம் நாள் அமாவாசைக்கு ஒரு நாள் முன்பு கொண்டாடப் படுகிறது. இந்த நாள் இரவு கோர அந்தகார இருளுக்கு அடையாளமாக இருக்கிறது. இவ்வாறு கோர இருள் மண்டியிருக்கும் இந்த நாளில் சிவராத்திரி கொண்டாடுவதன் ஆன்மீக இரகசியம் என்ன வென்றால், பரமாத்மாவாகிய சிவன் கல்பத்தின் இறுதியான கலியுக அஞ்ஞான இருள் சூழ்ந்திருக்கும் தருணத்தில் தான் பழைய சிருஷ்டியை விநாசம் செய்து அவதாரத்தின் மூலம் பாவங்கள் நிறைந்த தமோகுணமான உலகை மறுமலர்ச்சியடையச் செய் கின்றார். இதன் மூலமாக துக்கமும், அசாந்தியும் நீங்கி விடுகிறது.

ஜோதிர்பிந்து (ஒளிப்புள்ளியான) பரமாத்மா கலியுகத்தின் இறுதிக்கும் சத்யுக ஆரம்பத் திற்கும் இடையேயான சங்கமயுக சமயத்தில் பாக்கியசாலி ரதமான பகீரதன் (பிரம்மா) மூலமாக ஞான கங்கையின் பிரவாஹம் செய்கின்றார். உண்மையில் இது தான் சத்தியமான கீதை - ஞானமாகும். இதனை சரீரதாரி யான கிருஷ்ணர் அளிக்கவில்லை. அவ்யக்த மூர்த்தியான (அசரீரி) பரமாத்மாவாகிய சிவன் தான் உபதேசம் செய்தார்.

***நவயுகம் (சத்யுகம்) செல்வதற்காக ஈஸ்வரிய செய்தி:***

மகா சிவராத்திரி நேரம் மிக விசேஷமான காலம் மட்டுமல்ல. மாறாக புது யுகமாகிய சத்யுக சொர்க்கத்திற்கு செல்வதற்குத் தயாராகும் புண்ணிய காலமாகும். ஏனெனில் பரமாத்மா சுயம் மனிதர்களை, அவர்களிடமுள்ள விகாரங்களிலி ருந்து முக்தி அளிக்கின்றார். தேவதா பதவிக்கு யோக்கியர்களாக ஆக்குகின்றார். இருளிலிருந்து ஒளியை நோக்கி அழைத்துச் செல்கின்றார். ஆதலால் இந்த சங்கமயுக காலம் மகத்துவம் வாய்ந்த நேரமாகும். மேலும் இந்த மகான் காரியம் கடந்த 75 ஆண்டுகாலமாக நடந்து கொண்டிருக்கிறது. அதாவது பரமாத்மாவாகிய சிவன் அவதாரம் செய்து 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. புதுயுக ஸ்தாபனைக்கான காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது பரமாத்மாவாகிய சிவன் தன்னுடைய குழந்தைகளுக்கு அளிக்கின்ற செய்தியுமாகும்.

# உலகின் ஏழு ஆன்மீக அதிசயங்கள்

(பி.கு. சுவாதி, சென்னை)

நாம் வாழும் இப்பூமியில் இயற்கையினால் மேலும் மனித ஆற்றலால் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு உலக அதிசயங்களை குறிப்பிட்டுக் கூறும்படியாக பட்டியலிட்டு சொல்லிவிடமுடியும். இந்த அதிசயங்கள் யாவும் நன்கு அறியும் விதமாகவும், புகைப்படங்களின் வாயிலாக பிரபல மடைந்துள்ளது. இந்த உலக அதிசயங் களுக்கும் அப்பால் அதிக அளவில் தெரிந்துக் கொள்ளப்படாததாக இருப்பினும் கூட மனித இனத்திற்கு அதிசயத்திலும் அதிசயம் சேர்ப்பதாக இருப்பதும் உண்மையே.

அத்தகையவை ஏழு ஆன்மீக அதிசயங்களாகும்.

**அந்த ஏழு ஆன்மீக அதிசயங்களை பற்றி கீழே காண்போம் சற்றே....**

முதன்மையிலும் முதன்மையானது **ஆத்மா.** இதுவே சாஸ்வதமான நான் மற்றும் உண்மையானது. ஆனால் இதனை நம்மில் பெரும்பாலானோர் அறிந்திருக்கவில்லை. ஆத்மா என்பது ஓர் சூட்சுமமான ஒளி, அதற்குள் அழியாத எல்லையில்லா நடிப்பை நடிக்கும் பதிவு உள்ளது. இந்த சூட்சுமமான ஆத்மாவை தெய்வீக பார்வையினால் மட்டுமே காண முடியும்.

அழியாத தன்மைகொண்ட ஆத்மா உடல் என்ற ஓர் மத்திமத்தின் (Corporal Medium) மூலமாக தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்கிறது. உடல் அழியக்கூடியதாகும். ஆனால் ஆத்மா அழியாதது, உடலின் அவயங்கள் வாயிலாக ஆத்மா பார்த்தல், கேட்டல், உணர்தல் மற்றும் சிறப்பு வாய்ந்த நடிப்பை வெளிப்படுத்துகிறது.

ஆத்மாவில் தூய்மை, அன்பு, அமைதி, சக்தி மற்றும் ஆனந்தம் என்ற இயல்பான நற்குணங்கள் உள்ளது. இப்பண்புகளை வெளிப் புற தாக்குதல் ஏற்படாதவரை தன்னால் வெளிப் படுத்த முடியும். எனவே ஆத்மாவின் முக்கிய அம்சமாக இருப்பது யாதெனில் மிகவும் சூட்சுமமான ஓர் ஒளிப்புள்ளிக்குள் தனது அனைத்து விதமான நாடக பாத்திரத்தின் பதிவுகள் அடங்கியிருப்பதே.

இரண்டாவது ஆன்மீக அதிசயம் **இறைவன்.** அதாவது பரமாத்மா. ஆத்மாவைப் போலவே பரமாத்மாவும் கூட அழியாத ஒளிப்புள்ளியானவர். ஆனால் அவர் நம்மைபோல் மனித உடலை எடுத்து பிறப்பு, இறப்பில் வருபவர் இல்லை. மேலும் உலகின் பரவலான நம்பிக்கைக்கு முரண்பட்டு இறைவன் சர்வ வியாபியாகவும் இருப்பதும் இல்லை. இறைவன் ஆத்மாவைப்போல ஒளிப்புள்ளி வடிவில் இருப்பினும் கூட அவர் அனைத்து குணங்களிலும் கடலாக இருப்பவர். மேலும் என்றும் தூய்மையானவராகவும் இருப்பதினால் அனைத்து ஆத்மாக்களும் தீய குணங்களினால் பாதிக்கப்பட்டு துன்பத்தை அனுபவிக்கும் பொழுது தூய்மைப்படுத்துகிறார் மேலும் அவரால் மட்டுமே ஆத்மாக்களை உயர்த்தவும் முடியும்.

பரமாத்மா வசிக்கும் உலகில்தான் ஆத்மாக்களும் வசிக்கின்றன. இது மூன்று உலகங்களில் ஒன்றாகும், அதுவே **பிரம்மாண்டம்** எனப்படுகிறது.

இந்த மூன்று உலகமும் உலகின் மாபெரும் அதிசயமாகும். ஏனென்றால் எத்தனை தான் விஞ்ஞானம் வளர்ந்திருப்பினும் கூட மனிதனிடம் பூலோகத்தை பற்றி கூட ஓர் அளவு ஞானம் மட்டுமே உள்ளது. ஆனால் இறைவன் உணர்த்துகிறார் மனித உலகத்திற்கும் அப்பால் சூட்சும உலகம் என்ற வெண்மை ஒளி நிரம்பிய உலகம் உள்ளது, இங்கு ஒளியிலான சூட்சும

உடல் மூலமாக ஆத்மாக்கள் செல்ல முடியும். இதற்கும் அப்பால் செம்பொன் நிறமான ஒளி உலகம். இதுவே ஆத்மாவின் உலகம், முற்றிலும் அமைதி நிரம்பியதாகும். தன்னுடைய நடிப்பிற்கான காலம் வரும் வரை ஆத்மா இங்கு தான் வசிக்கிறது. காலச்சக்கரம் முடிவடையும் போது அனைத்து ஆத்மாக்களும் அங்கே திரும்பி சென்று விடுகின்றன.

ஆத்மாக்களின் இந்த பயணம் தான் எல்லையில்லா உலக நாடகமாகும் - இது ஓர் அதிசயமாகும். நாம் அனைவரும் இந்த உலக நாடகத்தின் நடிகர்கள், இதில் பல்வேறு விதமான நாடக பாத்திரங்களை ஏற்று நடித்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு பிறவியிலும் வெவ்வேறு உடல் என்ற ஆடையை மாற்றி வந்துள்ளோம். பந்து போன்று பரந்து விரிந்த நாடக மேடை இதில் கோடிக்கணக்கான நடிகர்கள் பல்வேறு நடிப்பையும் நடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு எல்லையில்லா நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும் ஆத்மா ஒரு கதா பாத்திரத்தை முடித்தவுடன் அது தனது ஆடையை (சரீரத்தை) கலைத்து விட்டு புதியதோர் ஆடையை அணிந்து கொண்டு நடிக்க ஆரம்பிக்கும். இதனைத்தான் பிறப்பு இறப்பு எனச் சொல்லப்படுகிறது.

காலச்சக்கரத்தின் ஆரம்பத்தில் எப்பொழுது ஆத்மாக்கள் கீழே இறங்கி நடிக்க ஆரம்பித்தனர் அந்த நேரத்தில் இந்த மானுட உலகத்தில் மகிழ்ச்சி என்ற பண்பும், தூய்மையுடன் நிறைந்த சூழலை அனுபவம் செய்தார்கள். இதனைத் தான் பொற்காலம் (சத்யுகம்) என சொல்லப்படுகிறது. இதனைத் தொடாந்து வருவது திரேதாயுகம் (வெள்ளி யுகம்) எனப்படும்.

திரேதாயுகம் செல்ல செல்ல ஆத்மாக்கள் தன்னுடைய உண்மையான அறிமுகத்தை மறந்து சரீர ரீதியிலான அறிமுகத்தினால் தன்னைத்தானே அறிந்துக் கொள்ள இயலாத தால் பயம், துன்பம் போன்ற தீய குணங்களை கொண்டு வந்து விடுகிறது. தன்னுடைய உண்மையான அறிமுகத்தையும், குணங்களை யும் மறந்து விட்ட படியால் ஆத்மா சரீர சுகத்தினாலும், சரீர சம்பந்தங்கள் மற்றும் சாதனங்களின் மூலமாக சுகத்தை அனுபவிக்க ஆரம்பித்துவிட்டது. இந்த எல்லைக்குட்பட்ட நிலை தான் தேக அபிமானம் எனப்படுகிறது. உணர்விலான இந்த மாற்றமானது இயற்கையின் தத்துவங்களையும் பாதிக்கிறது, இதன் வெளிப்பாடு தான் வெள்ளம், நிலநடுக்கம் மற்றும் மாறுபட்ட பருவகாலம் போன்ற இயற்கை உபாதைகளாகும்.

மூன்றாவதாக தாமிரம் மற்றும் இரும்பு யுகத்தில் அனைத்து ஆத்மாக்களும் உடல் அபிமானத்தில் முற்றிலுமாக வந்து விடுவதால் அனைத்து விதத்திலும் துன்பத்தை அடைகிறார் கள். ஆகையால் தான் அனைவரும் துக்கத்திலி ருந்து விடுபடச் செய்யும்படி இறைவனை நினைவு செய்கிறார்கள்.

இப்படியாக அனைத்து ஆத்மாக்களின் கூக்குரலைக் கேட்ட பின்பு, அனைத்து பந்தனங்களிலிருந்தும் சுதந்திரம் அளிப்பதற்காக பரமாத்மா கீழே வருகின்றார். அப்படி அவர் வரும் நேரம் தான் இந்த உலக நாடகத்தில் மிகச் சிறப்பு வாய்ந்த காலம். அதனை சங்கமயுகம் அல்லது கல்யாணகாரியுகம் எனப்படுகிறது. இதில் தனது கடமையான ஆத்மாக்களை தூய்மைப்படுத்துதலையும் மேலும் பொற்காலத்தை மீண்டும் கொண்டு வரச் செய்தலையும் செய்கின்றார்.

இந்த நேரம் இன்னும் ஓர் அதிசயமாகும். இதனை பெரும்பாலோர் அறிந்திருக்கவில்லை. மேலும் இறைவன் தனது குழந்தைகளை இராஜயோக தியானத்தின் மூலமாக துன்பத்திலி ருந்து விடுபடச்செய்கிறார், இதுவும் கூட ஓர் அதிசயமாகும்.

இராஜயோகத்தின் மூலமாக பரமாத்மாவுடன் புத்தியினால் தொடர்பு கொண்டு அவருடைய சக்திகளை பெறுவதால் ஆத்மாவில் நிறையும் நேர்மறை சக்தியானது மெல்ல மெல்ல அனைத்து விகாரங்களிலிருந்தும் விடுபடச் செய்து விடுகிறது.

இந்த அனைத்து அதிசயங்களிலும் மிகப்பெரிய அதிசயமானது **உலக நாடக சக்கரமே,** அதாவது சத்யுகத்திலிருந்து ஆரம்பமாகி இரும்பு யுகம் வரை முடிவடைகிறது இதற்கு 5000 வருடம் எடுத்துக் கொள்ளும். இந்த காலத்திற்கு உட்பட்டுதான் அனைத்து நிகழ்வுகளும், மாற்றங்களும் நடைபெறுகிறது. இதன் மறு அர்த்தம் என்னவென்றால் எதுவுமே 5000 வருடத்திற்கு மேலே செல்ல முடியாது.

முழு நாடக சக்கரமும் ஒவ்வொரு 5000 வருடத்திற்கு ஒருமுறை சுழலும் தன்மை யுடையது என்பதேயாகும்.

மேலும் இந்த ஆன்மீக அதிசயங்களைப் பற்றி அறிந்து கொள்ள அருகிலிருக்கும் பிரம்மா குமாரிகள் இராஜயோக தியான நிலையத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

## சுயமாற்றத்தின் மூலம் உலக மாற்றம் வரும்

**சுயமாற்றம் கொண்டு வருவது தனக்காகவும் மற்றெல்லோருக்காகவும் அற்புதத்தைப் படைப்பதாகும். எவ்வாறு பிள்ளைப்பூச்சி கண் கவரும் வண்ணத்துப் பூச்சியாக மாறி விடுவதைப்போல காலத்தால் மாறுபட்டுப் போன இன்றைய மனிதனும் கூட சுயமாற்றத்தின் மூலம் பண்புள்ள முழு மனிதனாகி விடுகிறான். வாழ்க்கைப் பயணம் என்பது காலத்திற்கேற்ப பல்வேறு பழக்க வழக்கங்கள் உடையதாக இருக்கின்றது. இதில் மனிதன் மாறுவதும் அடங்கும். ஆன்மீக ஞானம் ஆக்கப்பூர்வ சிந்தனை இறைவன் கருணை என்னும் அஸ்திவாரத்தில் மனிதன் முழுமையடைவதும் நடக்கக் கூடியதேயாகும்.**

## FORM VI

**STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT SANGAMA YUGAM (TAMIL)**

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Shanthi Dham, Plot No.:3702, Q-96, 3rd Avenue, Annanagar, Chennai-40 |
| 2. Periodicity of Publication | : | Bi-Monthly |
| 3. Printers Name | : | T. THIYAKESAN |
| Nationality | : | Indian |
| Address | : | 2/3, Weavers St., Thankesh Printers, Triplicane, Chennai-5 |
| 4. Publisher's Name | : | B.K. ANNAPOORNA |
| Nationality | : | Indian |
| Address | : | Shanti Dham, Plot No.3702, Q-96, 3rd Avenue, Annanagar, Chennai-40 Ph: 26266765, 26267441 |

I, B.K. Annapoorna hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 31.03.2012

(SD)B.K.ANNAPOORNA,
Signature of Publisher.

# சுட்டி - படு சுட்டி



**சுட்டி:** அண்ணே! வணக்கம்.

**படுசுட்டி:** வணக்கம் தம்பி, வாங்க,. மழை, தண்ணி எல்லாம் எப்படி? காத்து பலமா அடிச்சதா பேப்பர்லே பார்த்தேன். வெளச்சலுக்கு பாதிப்பு இல்லை தானே!

**சுட்டி:** ஆமாண்ணே! நீங்க சொல்ற மாதிரி கடலோரப் பகுதிகளிலே காத்து இருந்துச்சி. ஆனா, நம்ம பக்கமெல்லாம், சேதம் ஒன்னு மில்லண்ணே.

**படுசுட்டி:** அப்படியா! ரெம்ப சந்தோஷம். வேறென்ன விஷயம்?

**சுட்டி:** அண்ணே! இப்போ எங்கே பாத்தாலும் விஞ்ஞானத்தைப்பத்தி பேசுறாங்க. இல்லாட்டி, மதத்தைப் பத்தித்தான் பேசுறாங்க. இப்போ இதுக்கென்ன அப்படி விசேஷம்?

**படுசுட்டி:** தம்பி! நீங்க சொல்றாப்போல, இப்படி யெல்லாம் பேச்சு அடிபட்டுக்கிட்டுத் தானிருக்கு. யோசிச்சுப் பார்த்தா விசேஷம் தான் "னு" சொல்லலாம். ஏன்னா, விஞ்ஞானமாகட்டும், மதமாகட்டும், ரெண்டும் பெரிய சக்திகள் "னு" சொல்லலாம். என்ன சொல்றீங்க?

**சுட்டி:** அண்ணே! உங்க கருத்து போல சரிதான் "னு" மனசுக்குப்பட்டாலும் இதெல்லாம் ஓரளவு தான் உதவியிருக்குன்னு சொல்ல முடியும். நோய், நொடின்னு புதுசு, புதுசா உண்டாகிக் கிட்டுதானிருக்கு. இன்னொரு பக்கம், ஒத்துமையாயிருக்கணும் "னு" பேசுறோமே யொழிய வெறுப்பும், விரோதமும் குறைஞ்சிருக்கா?

**படுசுட்டி:** ஆமா தம்பி. நீங்க சொல்றது வாஸ்தவம் தான். விஞ்ஞானம் மற்றும் மதம் "ங்கிறது" உடல், உயிர் எப்படி சம்மந்த முடையதாக இருக்கோ, அப்படித்தான் இருக்கணும். இந்த ரெண்டையும் நாம எப்படி பயன்படுத்துறோம் "கிறது" முக்கியம் இல்லியா?

**சுட்டி:** அண்ணே! இதை கொஞ்சம் வெளக்கமா சொன்னா நல்லாயிருக்கும்.

**படுசுட்டி:** தம்பி! விஞ்ஞானம் உடலுக்கு பூரணமாக ஆறுதலைத் தந்திருக்கணும். மதம், உடலுக்கு உள்ளேயிருக்கிற உயிருக்கு பூரணமா ஆறுதலைத் தந்திருக்கணும். ஆனா, நீங்க நினைக்கிறப்போல தான் இருக்கு. ரெண்டும் நெறவேறலைன்னு சொல்லலாம்.

**சுட்டி:** என்ன காரணமாயிருக்கும். பாத்தா, ரெண்டும் விசேஷமானது தான். ஆனா, பெருமைப்படமுடியலே.

**படுசுட்டி:** தம்பி! இதுலே இரகசியம் ஒண்ணுமில்லே. விஞ்ஞானமும் மதமும் வேற வேறயா இருந்தாலும், இது ரெண்டுமே சண்டை போடச் சொல்லலே. அழிஞ்சுபோகச் சொல்லலே. ரெண்டுக்குமே பொதுவான சித்தாந்தம் ஒண்ணு தான். எல்லோரும் சுகமா வாழனும்"கிறது தான்" ஆனா நாம இதை புரிஞ்சுக்கலே "ன்னு" தான் சொல்லணும்.

**சுட்டி:** அதாவது நாம தான் சரியா பயன் படுத்தலே "ங்கிறீங்க" தவறு நம்ம பேர்ல தான் இருக்குன்னு சொல்றீங்க, அப்படித்தானே?

**படுசுட்டி:** ஆமா தம்பி. மனுஷன் மனுஷனா இருந்தவரைக்கும் ஒருவர்க்கொருவர் அன்பா இருந்தாங்க. ஆனா, இப்போ எப்படி மாறீட்டாங்க!

**சுட்டி:** சுபாவம் ரெம்பத்தான் மாறிடுச்சண்ணே! இப்படியே போனா, நிலைமை என்ன ஆகும்?

**படுசுட்டி:** நிலைமை கட்டுப்பாட்டுலே இல்லேன்னு சொல்றீங்க. சரி தான். ஆனாலும் வழி இருக்கத்தான் செய்யும் தம்பி.

**சுட்டி:** அப்படியா சொல்றீங்க. நீங்க சொல்றதைப்

பார்த்தா தெய்வமே துணை “னு” சொல்லலாமா?

**படுசுட்டி**: சரியாச் சொன்னீங்க தம்பி. கருணை யுள்ளவர் கடவுள் “னு” சொல்றோ மில்லியா? நமக்கு இருக்க வேண்டிய நம்பிக்கை இது ஒண்ணு தான்.

**சுட்டி:** அண்ணே! நம்பிக்கை இருந்தா போதும் “னு” சொல்றீங்களா?

**படுசுட்டி:** ஆமா தம்பி! நம்பிக்கை இருந்தா போதும் தம்பி. ஆனா இந்த நம்பிக்கை எப்போ வரும்?

**சுட்டி:** எப்போ வரும்?

படுசுட்டி: எப்போ நாம செய்யறது தவறு “ங்கிற” உணர்வு வருமோ நாம் தான் திருந்தனும் “னு” எப்போ தோணுதோ அப்ப தான் வரும்.

**சுட்டி:** அப்போ எல்லோருக்கும் நம்பிக்கை வரும் “ங்கிற” நம்பிக்கை உங்களுக்கிருக்கு. இருந்தா நல்லது தான்.

**படுசுட்டி:** அப்படீன்னா தம்பிக்கு நம்பிக்கை இல்லையா? இளமையாயிருக்கும்போது எப்படி யெல்லாம் பேசுறோம். நடந்துக்கிறோம். அபபடி வயசான காலத்துமே இருக்குதா?

**சுட்டி:** அனுபவம் தான் “னு” சொல்றீங்க. அனுபவம் மாத்திடும் “னு” சொல்றீங்க. சரி தானே!

**படுசுட்டி:** ஆமா தம்பி. சிலருக்கு நம்பிக்கை இயற்கையாகவே இருக்கும். சிலருக்கு நம்பிக்கை அனுபவத்துலே வரும். ஆனா சிலருக்கு காலம் தான் உணர்த்தும்.

**சுட்டி:** அப்போ. நீங்க சொல்றாப்போல, எல்லோருமே உணர்ந்திடுவாங்கன்னு நம்புறீங்க. அப்படித்தானே. இல்லே வித்தியாசம் ஏதாவது இருக்குமா?

**படுசுட்டி**: வித்தியாசம் “னு” சொன்னா, தம்பி பாருங்க. முன்கூட்டி உணர்றவங்க தங்களை நல்லபடியா மாத்திக்கிட்டு துன்பம் வந்தாலும், கவலைப்பட வேண்டிய நேரத்துலேயும் சமாளிப்பாங்க. ஆனா கடைசி காலத்துலே உணர்றவங்களுக்கு தங்களை மாத்திக்கணும் “னு” நெனச்சாலும் நேரமிருக்காது. அப்ப வருத்தப்படுவாங்க

**சுட்டி:** அதாவது இப்பவே சுதாரிக்கணும் “னு” சொல்றீங்க. உணரணும், அன்பாயிருக்கணும், அப்போ தான் வாழ்க்கையிலே சந்தோஷம் இருக்கும் “னு” சொல்றீங்க.

**படுசுட்டி:** ஆமா தம்பி. ஆனா மனசுலே கல்மிஷம் இருக்கிறவரைக்கும் அன்பு எப்படி வரும்? மொதல்லே மனசு சுத்தமாகனும். கோபம், பொறாமை, வெறுப்பு வீறாப்பு இதிலிருந்தெல்லாம் மனசை விடுவிக்கனும்.

**சுட்டி:** அண்ணே! இது பொதுவான விஷய மாயிருக்கு. எல்லார்கிட்டேயும் இதெல்லாம் இருக்கிறப்போ, விலக்க முடியும் “னு” நம்புறீங்களா?

**படுசுட்டி:** தம்பி! நம்பித்தான் ஆகணும். ஏன்னா? மொதல்ல இதெல்லாம் மனுஷனோட அசல் குணமில்லேங்கிறதைப் புரிஞ்சிக்கிறனும்.. ரெண்டாவது இதுனாலே துன்பந்தான் “ங்கிறதை”யும் புரிஞ்சிக்கிறணும். இதெல்லாத் தையும் விட்டா தான் நன்மை “ங்கிறதை” யும் உணரணும்.

**சுட்டி:** இப்படி ஒவ்வொருத்தரும் மாறுறது தான் எல்லாத்துக்கும் நன்மைங்கிறீங்க. வாஸ்தவம் தான்.

**படுசுட்டி:** தம்பி! யோசிச்சுப் பாருங்க. மனுஷனாலே தான் உலகம் கெட்டுப் போச்சுன்னு சொன்னா, மனுஷனாலே உலகம் நல்லதாகவும் ஆகணுமில்லியா?

**சுட்டி:** ஆமாண்ணே. நல்லா சொன்னீங்க.

**படுசுட்டி:** தம்பி! நாம் பொதுவா என்ன சொல்றோம்? இப்ப தான் இவ்வளவு மோசமாயிருக்கு. இதுக்கு மொதல்ல இப்படி யெல்லாம் இருக்கலே “னு” சொல்றோமில்லே. இதுக்கு முந்தி நல்லா இருந்தது “ன்னு” சொன்னா, அதுக்கு முந்தி இன்னும் நல்லா

இருந்திருக்கும் இல்லையா?

**சுட்டி:** அதாவது இப்போ நடக்கிறாப்போல பாவ கா்மங்கள் இதுக்கு முந்தி செய்யலேன்னு புரியுது. நல்லா இருந்தவங்க தான் இப்போ இப்படி மாறிட்டாங்கன்னு நினைக்க வேண்டியதா இருக்கு? என்னண்ணே சொல்றீங்க?

**படுசுட்டி:** சரியாச் சொன்னீங்க தம்பி. நாம தான் முந்தி இருந்தாப்போல நல்லவங்களா மாறணும். புண்ணியவான் அப்படின்னு சொல்றதைக் கேட்கிறப்போ எவ்வளவு சந்தோஷமாயிருக்கு. அதுனாலே, நாம் அப்படி ஆக முடியும் "னு" நம்பிக்கையும் வேணும். முயற்சியும் பண்ணனும் தம்பி. ஏன்னா? காலம் மாறிட்டே தானிருக்கு. அதுனாலே இன்னைக்கிருக்கிற நிலைமையும் மாறத்தான் போகுது. நிரந்தரமா இப்படியே இருக்கப்போறதில்லை. சரி தானே.

**சுட்டி:** நல்ல சொன்னீங்கண்ணே. நல்லபடியா மாறும் "ங்கிற" நல்ல சேதி சொன்னீங்க. மனசுக்கு ஆறுதலா இருக்கு.

**படுசுட்டி:** ஆமா தம்பி. கண்டிப்பா மாறும். கவலைப்படாதீங்க.

**சுட்டி:** ரெம்ப சந்தோஷம். புறப்படறேன். வணக்கம்.



## கோபத்தை வெற்றிக் கொள்ள முடியுமா?

**பி.கு. பசுபதி, கோயம்பத்தூர்**

இன்றைய உலகில் கோபம் என்ற பூதம் (அவகுணம்) இல்லாத மனிதா்களே இல்லை என்ற அளவிற்கு வியாபித்திருக்கின்றது. அதிக மானோா் இதை தங்களது சுய கௌரவம் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக் கின்றனா். ஏனெனில் கோபம் கொண்டால் தான் நாம் நினைத்ததை சாதிக்க முடியும் என்றும், கோபம் இருந்தால் தான் பிறா் என்னை மதிப்பாா்கள் என்றும் நினைக் கிறாா்கள்.

புராண காலங்களிலிருந்து இன்றைய கலி யுகம் இறுதி வரையிலும் கோபம் என்ற பூதத் தால் ஏற்பட்ட விளைவுகள் கணக்கிட முடியாத அளவிற்கு உள்ளது என்பதையும் நாம் அறிவோம். இன்று உலகத்தில் ஏற்படுகின்ற மதக்கலவரம், இனக்கலவரம், மொழிக்கலவரம், கொள்ளை, கொலை போன்ற அனைத்து தீய விளைவுகளுக்கும் மூல காரணமாக இருப்பது கோபம் என்பது தான் உண்மை.

### கோபம் வருவது எதனால்:

தான் விரும்பியபடி மற்றவா் நடக்க வில்லை என்றாலும், தான் நினைத்தது நடக்க வில்லை என்றாலும், மதிப்பு வாய்ந்த பொருளோ, நேரமோ, தனது எண்ணமோ பாதிக்கப்பட்டாலும், தன்னை பிறா் இகழ்ந்து பேசினாலும், தனது பேச்சை கேட்காமல் இருந்தாலும் என இப்படி பல காரணங்கள் உள்ளன. சில வேளைகளில் சாதாரண உணவு, உடை, தங்கும் இடம் கூட தன் விருப்பத்திற்கு மாறாக இருக்கும் போது கூட இந்த பூதம் வந்து விடுகிறது.

### நியாயமான கோபம்:

கோபம் கொள்பவா் தான் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலுக்கும், ஏதா ஒரு காரணம் இருக்கிறது என்றும் அதை நியாயப்படுத்து வதிலும் முயற்சிப்பாா். மேலும் தவறு செய்த வருக்கு கண்டிப்பாகத் தன் கோபத்தைக் காட்டி னால் தான் அவா் திருந்துவாா் என்று கடுமை யாக, உறுதியாக இருப்பாா்கள். சில சமயங்களில் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொள்கின்றாா் கள், இவ்வாறு இருந்தால் தான் மற்றவா்கள் மதிப்பாா்கள் என்று தவறாக மதிப்பிடுகிறாா்கள். இதனால் தனது சுய கௌரவம் தான் குறை கிறது என்பதை உணராமலே இருக்கின்றாா்

கள். உயர் பொறுப்பில் இருக்கும் மேலாளரா கட்டும், முதலாளியாகட்டும் இவர்கள் எப்போதும் சிரிக்கக் கூடாது என்பது சிலருடைய கொள்கையாக உள்ளது. எங்கு தூய்மையில்லையோ அங்கு உடனடியாக வந்து விடும் இந்த கோபம்.

இதற்கான காரணம் என்ன? நாம் நமது இயல்பான குணங்களை இழந்தது தான். மேலும் காலம் காலமாக அடக்கப்பட்டதால் தான், மற்றவர் துன்பத்தில் சுகத்தை தேடுவதால் கோபத்தை வெளிப்படுத்தும் அற்பமான காரியத்தை செய்து பின்னர் அதன் விளை வையும் அனுபவிக்கின்றோம். கோபம் என்பது மிகப்பெரிய பாவம். நகைச் சுவையாக ஒரு நிகழ்வு:

ஒருவர் முகத்தை மிக இறுக்கமாக வைத்துக்கொண்டு தலையில் கட்டுடன் வருகின்றார். வழியில் உங்களுக்கு இந்த நிலமை எப்படி வந்தது என்று அவர் நண்பர் கேட்கின்றார். இதற்கு என் மனைவி வழியில் வாழைப்பழத் தோல் வழுக்கி விழுந்து விட்டாள்! அதன் விளைவு தான் என்றார். அதற்கும் உங்கள் தலையில் அடிபட்டதற்கும் என்ன சம்பந்தம் என வினவ, என் மனைவி கீழே விழுந்ததைப் பார்த்து என்னையறியா மலேயே நான் சிரித்தேன் அதன் விளைவு தான் இது என்றார். மற்றவர் துக்கத்தில் தன் சுகத்தைத் தேடுவதால் கோபத்தின் விளைவை நாம் அனுபவித்துத்தான் தீர வேண்டும் என்பது தான் உண்மை.

### கோபத்தினால் நமக்கு நன்மை தானா?

கோபம் அடைவது நமக்கு நன்மையா? என யோசித்தால் பதில் - இல்லை என்றே மனம் சொல்லும். உலகில் எத்தனையோ மகான்கள் இராமர், புத்தர், இயேசு, நபிகள் போன்றோர்கூட பொறுமையும், அன்பும், ஒழுக்கமும் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து நடந்தார்கள் என அறிகிறோம்.

### கோபத்தால் ஏற்படும் விளைவுகள்:

நம்முடைய தேகத்தின் தற்போதைய நிலை, பழக்க வழக்கம், நடத்தை, எண்ணங்கள் போன்றவற்றினால் ஏற்படும் மாற்றமே கோபம்.

ஒருவன் கோபப்படும் போதெல்லாம் அவனுடைய உடலில் உள்ள (வெள்ளை அணுக்கள்) ஜீவ அணுக்கள் அழிக்கப்படு கின்றன.

ஒவ்வொரு முறை கோபம் அடையும் போதெல்லாம் உடலில் எதிர்ப்பு சக்தியானது 10% முதல் 60% வரை குறைந்து கொண்டே இருக்கும் என கூறப்படுகிறது.

நம் உடலில் அட்ரீனலின், கார்டிசால் என்ற சுரபிகள் அதிகம் சுரக்கின்றது. இதனால் மாரடைப்பு, பாரிச வாயு, அல்சர் மூளை யிலுள்ள செல்களின் அழிவு போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றது.

மேலும் இரத்தம் சூடாகின்றது, அதன் வேகம் அதிகமாகின்றது, நரம்பு மண்டலங்கள் சக்தியை இழக்கின்றது, சிந்திக்கும் திறனை இழக்கின்றது, முழு உடலுமே சூடாகி அதிக மான பாதிப்புக்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

ஒருவரிடம் நாம் கோபப்படும்போது அவருக்கு ஏற்படும் பாதிப்பை விட அதிகமான பாதிப்பு யார் கோபப்படுகின்றார்களோ அவர் களுக்குத் தான் ஏற்படுகின்றது.

ஆன்மீக ரீதியில் பார்த்தால் ஆத்மா தன்னுடைய சக்தியை 10 % முதல் 60% வரை இழக்கிறது என்பதும் உண்மை.

கோபத்தால் முதலில் பாதிக்கப்படும் பகுதி மூளை தான். அன்பாகவும், அமைதி யாகவும், சந்தோஷமாகவும் இருக்கும்போது அனைத்து செல்களும் 100% சரியாக இருக் கின்றது.

## சில விதிமுறைகளால் நாம் கோபத்தை குறைத்துக் கொள்ள முடியும்

1. முதலில் நமக்கு தேவையில்லாத, அற்பமான, முக்கியமற்ற, விசயத்தில் தலையிடுவதை தவிர்க்கலாம்

2. மெதுவாக, குறைவாக, அன்பாக பேசக் கற்றுக் கொள்ள வேண்டும்.

3. பசிக்கும்போது தேவையான உணவை, எளிதாக ஜீரணமாகக்கூடிய உணவு வகைகளை (சாத்வீக உணவு) உட்கொள்ளுங்கள்.

4. அடிக்கடி இறைவனின் குழந்தையாகிய நான், அவரின் பார்வையில் இருக்கின்றேன் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்

5. கூடுமானவரை நல்ல காற்றோட்டமான இடத்தில் இருந்து மூச்சுப் பயிற்சியை செய்யுங்கள்

6. உற்சாகம் தரக்கூடிய விசயங்களை சிந்திப்பதாலும், கேட்பதாலும் கோபத்தை கட்டுப்படுத்த முடியும்,

7. மனம் விட்டு சிரிக்கும் போது கூட மூளையில் தூங்கிக் கொண்டிருக்கும் செல்கள் விழிப்படையும்.

8. அமைதியாக இருந்து தியானம் செய்யுங்கள்.

9. கோபம் வருகின்ற வேளையில் தண்ணீர் குடிக்கவும்.

10. கோபத்தை தள்ளிப்போடுங்கள், தவறை உடனே சுட்டிக் காட்டாதீர்கள்.

உளவியல் முறையிலும் கோபத்தை தடுக்க முடியும் என்ற கருத்தை கீழே உள்ள உதாரணம் மூலம் தெரிந்துக் கொள்ளலாம்.

ஒரு முறை நபிகள் நாயகத்தை சந்திக்க ஒருவர் வருகிறார். அவர் நபிகளிடம் அய்யா எனக்கு கோபம் அதிமாக வருகின்றது, இதிலிருந்து விடுபட நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்.

நபிகளும் உங்களுக்கு கோபம் வரும் போது சற்று நிதானியுங்கள்.

**அப்படியும் கோபம் வந்தால்?** தண்ணீர் பருகுங்கள்.

**அப்படியும் கோபம் வந்தால்?** அந்த இடத்தை விட்டு விலகிச் செல்லுங்கள்.

**அப்படியும் குறைக்க முடியவில்லை என்றால்?** - மௌனமாக இருங்கள்

**இப்போதும் குறைக்க முடியவில்லை என்றால்?** படுத்து தூங்கி விடு என்கின்றார். இதன் மூலம் நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் நமது எண்ணத்தின் வேகத்தை குறைக்கின்ற போது கோபம் என்பது எளிதாகவே நம்மை விட்டு விலகி விடும், மேலும், உடலின் பல்வேறு பாதிப்புகளிலிருந்து காப்பாற்றப் படுவோம். கோபத்தை எளிதாக வெற்றிக் கொள்ள முடியும். மேலும் சுபமான எண்ணங்களும், நேர்மறையான எண்ணங்களையும் வளர்த்துக் கொள்ளும் போதும் கோபத்தை எளிதாகவே நாம் வெற்றிக் கொள்ள முடியும். இதற்கு ஆதாரமாக இருப்பது **இராஜயோக தியானம்** என்பது உண்மை.

## இவர்களுக்கு இடமில்லை....

**சிநேகம் (அன்பு) இருக்கின்ற இடத்தில் சினத்திற்கு (கோபம்) இடமில்லை**

**தைரியம் இருக்கின்ற இடத்தில் பயத்திற்கு இடமில்லை**

**தூய்மை இருக்கின்ற இடத்தில் துன்பத்திற்கு இடமில்லை**

**அமைதி இருக்கின்ற இடத்தில் குழப்பத்திற்கு இடமில்லை**

**இரக்கம் இருக்கும் இடத்தில் துக்கத்திற்கு இடமில்லை**

**ஆனந்தம் இருக்கின்ற இடத்தில் கவலைக்கு இடமில்லை**

# எனது கேள்வியும் - இறைவனின் பதிலும்

பி.கு. செல்வநாதன், அண்ணாநகர், சென்னை



இன்றைய உலகில் என்னைப் போன்றே ஒவ்வொரு சராசரி மனிதனும் நேர்மையாகவும், சாந்தியாகவும், சுகமாகவும், அன்பாகவும் வாழ விரும்பக்கூடும். அனைவரின் உள்ளத்திலும் தானும் மகிழ்ச்சியாக இருந்து தன்னைச் சுற்றி இருப்பவர்களும் மகிழ்ச்சியுற வேண்டும் எனும் ஆவலும் எதிர்பார்ப்பும் உள்ளது. ஆனால் யதார்த்தமான வாழ்க்கையோ எதிர்மாறாக உள்ளது. வாழ்க்கை பயணத்தில் பல இடங்களில் ஏற்படும் தடைகள், பிரச்சனைகள் இயற்கையின் எதிர்பாராத சீற்றங்கள், நாளை என்ன நடக்குமோ எனும் எதிர்காலத்தின் பயங்கள். இவற்றையெல்லாம் நான் மட்டுமல்ல அனைத்து மக்களுமே சந்திக்கும்போது இந்த படைப்பின், நம் வாழ்வின் நோக்கத்தின் மீதே சந்தேகம் ஏற்படுகிறது. எனவே இப்படைப்பு கர்த்தாவாகிய கடவுளிடமே ஏன் இத்தகைய குறைபாடான படைப்பு என கேள்விகளை கேட்க வேண்டும் என்ற ஏக்கம் ஏற்படுகிறது. எனது கேள்விக்கு கடவுளின் பதில் இவ்வாறாகத்தான் இருக்கும் என்று நம்புகிறேன்.

**கேள்வி: கடவுளே இம்மானிட வாழ்க்கையின் பலன் என்ன?**

**பதில்:** குழந்தாய், உங்களுடைய இயற்கையான தன்மைகளான சுகம், சாந்தி, அன்பு, சக்தி ஆகியவற்றை அனுபவம் செய்வதற்காகவே இப்பூமியில் மானிட பிறவி எடுத்து பல மனிதர் களுடன் சேர்ந்து இந்த வாழ்க்கை நாடகத்தில் பங்கு பெற வந்திருக்கிறீர்கள்.

**கேள்வி: சுகம், சாந்தியை அனுபவம் செய்வதற்காக இம்மனித வாழ்க்கை என்றால் ஏன் இவ்வளவு துக்கமும் அசாந்தியும் நிலவுகிறது?**

**பதில்:** குழந்தாய்! இதற்கு காரணம் அறியாமை. உங்களைப்பற்றியும், வாழ்க்கை வாழ வேண்டிய முறை பற்றியும் அறியாமை தான்.

**கேள்வி: இன்று விஞ்ஞானமும், தொழில் நுட்பமும், மருத்துவமும் மிக வேகமாக முன்னேறி உள்ளது, அவை மனித வாழ்க்கை சுகம் பெற பெரும் முயற்சி செய்து பல கண்டு பிடிப்புகளையும் உருவாக்கியுள்ளது. பின் எப்படி அறியாமை இருக்க முடியும்?**

**பதில்:** ஆம் விஞ்ஞானம், தொழில் நுட்பம், தொலை தொடர்பு என அனைத்து துறையிலும் மனித வாழ்க்கையை மகிழ்ச்சியாக்க மிக வேகமாக முன்னேறி கொண்டு இருக்கிறீர்கள் என்பது உண்மை. ஆனால் உங்கள் இலட்சியத்தை அடைய வேகம் மட்டும் போதாது, அந்த பாதை சரியானதா எனும் விவேகமும் வேண்டும். பாதை சரியானதாக இல்லாமல் வேகம் மட்டும் இருக்குமானால் இலக்கை நெருங்குவதற்கு பதில் இலக்கை விட்டு விலகி சென்று கொண்டே இருக்கிறீர்கள் என்பதில் தான் அறியாமை உள்ளது.

அணுவை உணர்ந்த நீங்கள் ஆத்மாவை உணர்ந்துள்ளீர்களா?

கடலின் ஆழத்தை உணர்ந்த நீங்கள் மனித மனதின் ஆழத்தை உணர்ந்துள்ளீர்களா?

கம்ப்யூட்டரை படைத்த நீங்கள் கருணை உள்ளம் கொண்ட மனிதர்களை படைக்க முடிந்ததா?

பல நோய்களுக்கு மருந்துகளை கண்டு பிடிக்கும் புத்திசாலியாக இருந்தும், ஏன் புது நோய்கள் வருவதை தடுக்க முடிவதில்லை.

உடலின் இயக்கத்தை அறிந்த நீங்கள் உயிரின் சக்தியை பற்றி உணர்ந்துள்ளீர்களா?

உலகின் எங்கோ ஒருமூலையில் இருப்ப வருடன் தொலை தொடர்பு வைத்து கொள்ளும் வழி அறிந்த உங்களால் அடுத்த வீட்டுக்

காரருடன் எவ்வளவு அன்பாக நடந்துக் கொள்கின்றீர்கள்?

இரவை பகலாக மாற்றும் விஞ்ஞானத்தால் இயற்கையின் சீற்றத்தை குறைக்க முடிந்ததா? சட்டங்களை வகுத்த உங்களால் குற்றங்களை குறைக்க முடிந்ததா?

சிறைச்சாலைகளை அதிகரிக்க முடிந்த உங்களால் சீர்திருந்திய மனிதர்களை அதிகரிக்க முடிந்ததா?

அடுக்குமாடி கட்டடங்களை கட்டிய நீங்கள் மனதை அமைதியாக்கும் வழியை அறிந்துள்ளீர்களா?

இதற்கெல்லாம் காரணம், இன்னும் வாழ்வின் சூட்சுமமான விஷயங்களை உணராததே என்பது தான் உண்மை. இந்த ஸ்தூலமான இரு கண்களால் ஸ்தூலமான விஷயங்களையே அறிந்து கொள்ள முடியும், புரிந்து கொள்ள முடியும். ஆனால் வாழ்க்கையின் அடிப்படை நோக்கம், சுகம், சாந்தி, அன்பு, ஆனந்தம் சக்தி ஆகியவை சூட்சுமான ஞானக் கண் மூலம் மட்டுமே அறிய முடியும்.

எப்பொழுது உங்கள் ஞானக்கண் எனும் மூன்றாவது கண் திறக்கப்படுமோ அப்பொழுதே அறியாமை எனும் இருள் விலகி வாழ்வை சரியாக புரிந்து சுகமாக வாழ முடியும்.

**கேள்வி: நீங்கள் கூறும் இந்த ஆன்மீக அணுகு முறையை பல காலமாக, பல வழி முறைகளில் இறைவனை அடைவதற்காக பல தர்ம தலைவர்கள் வழிகாட்டியுள்ளார்கள். இருப்பினும் ஏன் மனித வாழ்வில் அமைதி, ஒற்றுமை ஏற்படவில்லை?**

**பதில்:** குழந்தைகளே! வாழ்க்கை நாடகத்தின் பல கால கட்டத்தில் பல தர்ம தலைவர்கள், மகான்கள் இப்புவியில் அவதரித்து பல நல் வழிகளை எடுத்துரைத்தார்கள். இருப்பினும் அதில் முழுமையில்லாததாலும், அவர்கள் பிறப்பு இறப்பு சக்கரத்தில் வருபவர்களாக இருப்பதாலும் அக்கருத்துக்கள் நாளுக்கு நாள் பலமிழந்து விட்டது. நடைமுறை படுத்தப் படுவதிலும் குறையுள்ளது. மேலும் மேலும் புதிய கோட்பாடுகளும், வழிமுறைகளும் உருவாக்கினீர் கள். ஆதியில் மனித மனம் ஒன்றுபடுவதற்காக உருவாக்கப்பட்ட மதங்களின் வழிமுறைகளை சரியாக புரிந்து நடைமுறை படுத்தாததால் அவையே இன்று பிரிவுகளுக்கும், கலவரங் களுக்கும் காரணமாகி விட்டது.

அனைத்து தர்மத்திலும், பிரிவுகளிலும், நாடுகளிலும் நல்ல மனிதர்களும் உள்ளனர் தீயகுணங்கள் உடையவரும் இருக்கின்றார்கள். இதை உணராமல் இது தான் நல்ல தர்மம், மற்றது மோசமான வழி என முற்றுப் புள்ளி இட்டுவிடுகிறார்கள்.

தர்ம தலைவர்கள் மனித உள்ளங்களுக்கு, உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க கூறினார்கள். ஆனால் நீங்கள் உடல் நிறங் களுக்கும், அமைப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர்கள். காரணம் ஒவ்வொரு தர்மத்திலும் மனித வாழ்க்கை முறை சீர்குலைவை அடையக் கூடாது என்பதற்காக பல அறிவுரைகள் இருப்பினும் அவற்றை நடைமுறை வாழ்க்கை யில் கொண்டு வரும் சக்தி உங்களிடம் இல்லாததால் லட்சியம் நிறைவேறவில்லை.

இதுவும் உங்கள் தவறன்று. எப்பொழுது மனிதர்களின் முயற்சிகள் எல்லாம் பலனளிக்க தவறுமோ அப்பொழுதே என்னுடைய சிரேஷ்டமான வழிமுறை உலகிற்கு அளிக்கப் படுகிறது. கூடவே அதை நடைமுறை படுத்தும் சக்தியும் என்னிடமிருந்து பெறுகிறீர்கள். அதன் மூலமே நீங்கள் இந்த ஆன்மீக தன்மையை மீண்டும் உங்கள் வாழ்வில் அடைய பெறுகின்றீர்கள். இது இவ்வாழ்க்கை நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ள ஓர் உண்மையாகும்.

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர்,